# இலக்கு

வாராந்த மின்னிதழ்

GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 411

சனி, 03 ஒக்ரோபர், 2026 | பக்கங்கள் 15

www.ilakku.org










# தியாக தீபத்துக்கு சிலை வைக்கப்பட்டமை தொடர்பாக 8 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.



யாழ்ப்பாணம் - நல்லூர் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் அவரது உருவாச்சிலையை வைத்தமை தொடர்பில் சுமார் எட்டு பேரிடம் யாழ்ப்பாண குற்றத் தடுப்பு பிரிவினர் வாக்குமூலங்களை நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் புதிதாக திலீபனின் சிலை ஒன்று வைக்கப்பட்டது.

குறித்த சிலையானது கடந்த 27 ஆம் திகதி யாழ்ப்பாண காவல்துறையினரால் உடைத்து எடுத்துச்செல்லப்பட்டது. இந்த நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் ஏற்கனவே யாழ். மாநகர முதல்வர் மற்றும் ஆணையாளரிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்ட நிலையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த ஆறு பேரிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டது. குறித்த வாக்குமூலங்களை பெற்ற யாழ்ப்பாணம் குற்றத் தடுப்பு பிரிவினர் அது தொடர்பில் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்க வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## பிரமந்தனாற்றுப் படுகொலையின் 41ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்று இடம்பெற்றது.

பிரமந்தனாற்றுப் படுகொலையின் 41ஆம் ஆண்டு நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டது. 1985 ஆம் ஆண்டு ஒக்டோபர் இரண்டாம் திகதி அதிகாலை இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது உயிரிழந்த பொதுமக்களை நினைவுகூரும் நாளாக இன்றைய தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

1985 ஒக்டோபர் இரண்டாம் திகதி அதிகாலை வேளையில் பிரமந்தனாற்றுக் கிராமத்தின் வான்பரப்பில் உலங்குவானூர்தி ஒன்று வட்டமிட்டவாறு துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் அதனைத் தொடர்ந்து மூன்று சிறிய ரக விமானங்கள் வானில் வட்டமிட்ட தாகவும் சம்பவத்தை நினைவுகூரும் சாட்சியங்கள் தெரிவிக்கின்றன.

இதனைத்தொடர்ந்துகிராமத்தின்தெற்குஎல்லையைஅண்மித்தகாட்டுப்பகுதியில் உலங்குவானூர்தி மூலம் இராணுவ அணிகள் தரையிறக்கப்பட்டதாகவும் பின்னர் அவர்கள் கிராமத்தைச் சுற்றிவளைத்து முன்னேறியதாகவும் அக்காலச் சம்பவங்களைப் பதிவு செய்தவர்களை கோடிட்டு ஊடகம் ஒன்று செய்து வெளியிட்டுள்ளது.

வீடுகளை விட்டு வெளியே வந்த மக்களுக்கு அப்பகுதியைச் சேர்ந்த சிலர் இராணுவத்தினர் கிராமத்தை நோக்கி முன்னேறி வருவதாக எச்சரித்ததாகவும் சாட்சியங்கள்

தொடர்ச்சி: பக்கம் 13

## மயிலத்தமடு-மாதவனை பண்ணையாளர்கள் தீர்வு கோரி காவல்துறையில் முறைப்பாடு.

மட்டக்களப்பு, மயிலத்தமடு மற்றும் மாதவனை பகுதிகளைச் சேர்ந்த கால்நடைப் பண்ணையாளர்கள் தங்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்கள் மற்றும் வாழ்வாதாரப் பிரச்சனைகள் குறித்து மட்டக்களப்பு மாவட்ட காவல்துறை சிரேஷ்ட அத்தியட்சகரிடம் நேரில் சென்று முறைப்பாடு செய்துள்ளனர்

மயிலத்தமடு பகுதியில் சட்டவிரோதமாகப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவர்கள் மற்றும் காவல்துறை பிரிவினர் அங்கு வந்து பண்ணையாளர்களை அச்சுறுத்துவதோடு, அவர்களின் வாடிகளைப் பிரித்துச் செல்லுமாறு வற்புறுத்துவதாகவும் பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

மேலும், அப்பகுதியில் உள்ள காடுகள் அழிக்கப்படுவதால் கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்கள் பாதிக்கப்படுவதாகவும், யானை போன்ற வனவிலங்குகளின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தங்களின் மாடுகள் சுடப்பட்டு கொல்லப்படும் சம்பவங் களுக்கு உரிய நீதி கிடைக்கவில்லை என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

பண்ணையாளர்களுடன் நடைபெற்ற இந்த சந்திப்பின் போது, மட்டக்களப்பு மாவட்ட காவல்துறை அத்தியட்சகர், மகாவலி மற்றும் வனப்பரிபாலனத் துறை

தொடர்ச்சி: பக்கம் 11

# ஐக்கிய அரபு அமீரகத்தின் எரிவாயு வயல்களில் தீ




ஐக்கிய அரபு அமீரகத்தின் (UAE) மிகப்பெரிய நிலப்பரப்பு சார்ந்த (onshore) எண்ணெய் மற்றும் எரிவாயு வயல்களில் ஒன்றான ‘பு ஹசா’ (Bu Hasa) எண்ணெய் வளாகத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அபுதாபிக்கு தென்மேற்கே அமைந்துள்ள இந்த வளாகத்தை ADNOC நிறுவனம் இயக்கி வருகிறது.

கடந்த வியாழக்கிழமை (1) ‘சென்டினல்-3’ (Sentinel-3) செயற்கைக்கோள் எடுத்த படங்களில், இந்த வளாகத்திற்கு மேலே சுமார் 50 கிலோமீட்டர் தூரத்திற்குக் கரும்புகை படர்ந்திருப்பது தெரிகிறது. நாசாவின் (NASA) FIRMS அமைப்பு இந்தத் தீ விபத்தின் வெப்ப ஆற்றலை 143 மெகாவாட் என்று பதிவு செய்தது. அதேவேளையில், VIIRS-இன் ‘மிட்-இன்ஃப்ராரெட்’ (mid-infrared) அலைவரிசை 367 கெல்வின் வெப்பநிலையைக் காட்டியது; இது அந்த உணரி (sensor) பதிவு செய்யக்கூடிய அதிகபட்ச அளவாகும். எனவே, தரவுகள் காட்டுவதைவிடத் தீயின் வெப்பம் அதிகமாக இருக்கக்கூடும் என்று இது உணர்த்துகிறது. இன்று அதிகாலையில், அபுதாபி பகுதியில் விமானப் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

பு ஹசா வயலில் உற்பத்தி செய்யப்படும் எண்ணெய் ‘ஹப்ஷான்-புஜைரா’ (Habshan-Fu-

தொடர்ச்சி: பக்கம் 08

## எப்ஸ்டீன் விவகாரம்: நோர்வே பிரதமரிடம் விசாரணை



பாலியல் குற்றவாளியாகத் தண்டிக்கப்பட்ட மறைந்த ஜெஃப்ரி எப்ஸ்டீனுடன் (Jeffrey Epstein) தொடர்புடைய தொடர்புகள் மற்றும் நிதியுதவிகள் குறித்த குற்றச்சாட்டுகள் காரணமாக, நார்வே பிரதமர் ஜோனாஸ் கார் ஸ்டோர் (Jonas Gahr Støre) உட்பட 11 தற்போதைய மற்றும் முன்னாள் உயர்மட்ட அமைச்சர்கள் மீது அந்நாட்டு நாடாளுமன்றம் விசாரணை ஒன்றைத் தொடங்கியுள்ளது.

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பின் நிர்வாகத்தின் கீழ் உள்ள நீதித்துறை, கடந்த ஜனவரி மாதம் எப்ஸ்டீன் தொடர்பான லட்சக்கணக்கான ஆவணங்களை வெளியிட்டது. இந்த ஆவணங்கள் உலகம் முழுவதும் உள்ள அரசியல்வாதிகள், அரச குடும்பத்தினர் மற்றும் பெரும் செல்வந்தர்களுடன் அவருக்கு இருந்த தொடர்புகளை வெளிப்படுத்தின.

நோபல் அமைதிப் பரிசுக்குச் சொந்தமானதும், சர்வதேச இராஜதந்திரத்தின் முக்கிய மையமாகவும் திகழும் நார்வேயில், இந்த விவகாரம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி, நாடாளுமன்ற மற்றும் காவல் துறை விசாரணைகளுக்கு வழிவகுத்துள்ளது.

1997 மற்றும் 2018-க்கு இடைப்பட்ட காலத்தில், வெளியுறவு அமைச்சகம் ‘சர்வதேச அமைதி நிறுவனத்திற்கு’ (International Peace Institute) 130 மில்லியன் குரோனருக்கும் (சுமார் 13.5 மில்லியன் டாலர்) அதிகமான நிதியை ஒதுக்கியதாக வெளியான தகவல்களைத் தொடர்ந்து, புதன்கிழமையன்று (30) இது குறித்த பொது விசாரணை தொடங்கியது.

ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்த இந்தச் சிந்தனைக் குழுவை (think tank), 2005 முதல் 2020 வரை நார்வேயின் முக்கிய இராஜதந்திரியும், 1993-ஆம் ஆண்டு ஒஸ்லோ ஒப்பந்தங்களின் (Oslo Accords) முக்கியச் சிற்பியுமான டெர்ஜே ரோட்-லார்சன் (Terje Rød-Larsen) வழிநடத்தினார். எந்தத் தவறும் செய்யவில்லை என்று மறுத்துள்ள ஸ்டோர், 2005 முதல் 2012 வரை வெளியுறவு அமைச்சராகப் பணியாற்றினார்.

1990-களில் மத்திய கிழக்கு அமைதிப் பேச்சுவார்த்தைகளில் முக்கியப் பங்காற்றிய ரோட்-லார்சன், சட்டவிரோதக் கடன்கள் மற்றும் பாலியல் கடத்தலுக்கு

தொடர்ச்சி: பக்கம் 11

## நேட்டோ நட்பு நாடுகளிடையே விரிசல்



அமெரிக்கா,நேட்டோநட்பு நாடுகளுக்கு ஒரு “உள்” மற்றும் “வெளி” வட்டத்தை உருவாக்கி வருகிறது. கூட்டணியின் எதிர் காலம் குறித்து விவாதிக்க அமெரிக்க பாதுகாப்புத் துறையால் உருவாக்கப்பட்ட பணிக்குழுவிலிருந்து, இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் பால்டிக் நாடுகள் உள்ளிட்ட பல முக்கிய நேட்டோ நட்பு நாடுகளை டிரம்ப் நிர்வாகம் விலக்கியுள்ளது என்று பொலிடிகோ பத்திரிகை கடந்த வியாழக் கிழமை (1) தெரிவித்துள்ளது.

கொள்கைக்கான பாதுகாப்புத் துணைச் செயலாளர் எல்பிரிட்ஜ் கோல்பி தலைமையிலான “பெர்கன் குழுவில்” தற்போது அமெரிக்கா, நார்வே, ஸ்வீடன், பின்லாந்து, போலந்து, ஜெர்மனி மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன. விலக் கப்பட்ட நட்பு நாடுகள், தேர்வுக்கான அளவுகோல்கள் தெளிவாக இல்லை என்றும், வாஷிங்டன் நேட்டோ உறுப்பு நாடுகளை அதிக மற்றும் குறைந்த ஆதரவைப் பெறும்

தொடர்ச்சி: பக்கம் 11

## மேற்குக் கரைத் தீர்மானத்தை ஆதரித்த செனட்டர்களை அனைத்துலக மன்னிப்புச்சபை பாராட்டுகிறது



ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் ஒன்பது அமெரிக்கர்கள் கொல்லப்பட்டது குறித்தும், இராணுவத் தடுப்புக்காவலில் உள்ள பாலஸ்தீனியக் குழந்தைகளை இஸ்ரேல் நடத்தும் விதம் குறித்தும் டிரம்ப் நிர்வாகம் அறிக்கை அளிக்க வேண்டும் எனக் கோரும் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்த அமெரிக்க செனட்டர்களை அனைத்துலக மன்னிப் புச்சபை பாராட்டியுள்ளது.

செவ்வாயன்று (29) ஜனநாயகக் கட்சி செனட்டர் கிறிஸ் வான் ஹோலனால் சபையில் கொண்டுவரப்பட்ட இந்தத் தீர்மானம், 47-53 என்ற வாக்கு வித்தியாசத்தில் தடுக்கப்பட்டது.

“நேற்று இரவு S. Res. 852-க்கு ஆதரவாக வாக்களித்த 47 செனட்டர்களுக்கும் நன்றி” என்று அனைத்துலக மன்னிப்புச்சபை X தளத்தில் வெளியிட்ட பதிவில் கூறியுள்ளது. “இஸ்ரேலிய அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச சட்ட மீறல்களுக்கு அந்நாட்டைப் பொறுப்பேற்கச் செய்யுமாறு டிரம்ப் நிர்வாகத்தை நாம் தொடர்ந்து வலியுறுத்த வேண்டும்” என்றும் அந்த அமைப்பு மேலும் கூறியுள்ளது.

தொடர்ச்சி: பக்கம் 06

## முல்லையில் 17,469 ஹெக்டேயர் காணிகளை விடுவிக்க ரவிகரன் நா.உ. வலியுறுத்தல்



முல்லைத்தீவு மாவட்டத்தில் வனவளத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் என்பவற்றின் கையகப்படுத்தலில் இருந்து விடுவிக்கத் தீர்மானிக்கப்பட்ட 17,469.58 ஹெக்டயர் காணிகள், மக்களிடமிருந்து ஆவணங்கள் கோரப் படாமல் உடனடியாக விடுவிக்கப்படவேண்டுமென நாடாளு மன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

அவ்வாறு காணிகளுக்குரிய ஆவணங்களைக் கோருவதா னால், யுத்தத்தை நடாத்தி மக்கள்மீது குண்டுகளைப்போட்டு, மக்களை அகதிகளாக ஓடச்செய்த முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜயபக்சவிடமும் அவர்களுடைய சகாக்களிடமும் ஆவணங்களைக் கோருமாறும் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், யுத்தத்தினை நடாத்தியமைக்காக கோட்டாபய ராஜபக்சவிற்கு எதிராக வழக்கினைப் பதிவுசெய்யுமாறும் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரிடமும் கேட்டுக் கொண்டார்.

முல்லைத்தீவு மாவட்டசெயலகத்தில் 01.10.2026அன்று இடம்பெற்ற முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

## இலங்கையின் முதலீட்டுச் சூழல் குறித்து அமெரிக்கா கடும் விமர்சனம்



கொழும்பு, ஒக்டோபர் 1: 2022ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீண்டு, கடந்த ஆண்டு 5 சதவீத பொருளாதார வளர்ச்சியைப் பதிவு செய்த போதிலும், நாட்டின் முதலீட்டுச் சூழல் தொடர்ந்தும் சவால்களுக்கு உட்பட்டுள்ளதாக அமெரிக்க வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

'2026 Investment Climate: Sri Lanka' என்ற அறிக்கையில், 2024ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் 3 பில்லியன் அமெரிக்க டொலர் திட்டத்தில் அரசாங்கம் தொடர்ந்துள்ள அர்ப்பணிப்பு முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப் பிடப்பட்டுள்ளது. எனினும், சந்தைத் திறந்த தன்மை தொடர்பில் அரசாங்கத் தரப்பிலிருந்து வெளியாகும் முரண்பட்ட தகவல்கள் காரணமாக முதலீட்டாளர்கள் இன்னமும் எச்சரிக்கையுடன் இருப் பதாக அறிக்கை கூறுகிறது.

2025ஆம் ஆண்டு இலங்கையின் அந்நிய நேரடி முதலீடு 1.06 பில்லியன் அமெரிக்க டொலராகவும், அது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் ஒரு சதவீதமாகவும் இருந்தது. உற்பத்தி, துறைமுக அபிவிருத்தி, சுற்றுலா, தகவல் தொழில்நுட்பம், BPO மற்றும் ரியல் எஸ்டேட் ஆகியவை அதிக முதலீட்டை ஈர்த்த துறைகளாகும்.

கொள்கை நிலைத்தன்மை, ஒழுங்குமுறைச் சீர்திருத்தம், திறன்மிக்க தொழிலாளர்கள், தொழில்துறை நிலத்துக்கான அணு கல், திறமையான தளவாட வசதிகள் மற்றும் வர்த்தக நடை முறைகளை எளிமைப்படுத்துதல் ஆகியவற்றில் கூடுதல் கவனம் தேவை என அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. மேலும், ஒழுங்குமு றைகளின் கணிக்க முடியாத தன்மை, அதிகாரத்துவத் தடைகள், சட்ட நிச்சயமற்ற தன்மை மற்றும் வெளிப்படைத் தன்மைக் குறைபாடுகள் முதலீட்டுக்கு தடையாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலீட்டுச் சபை பல்வேறு அரச நிறுவனங்களுக்கிடையே அதிகாரங்கள் பிரிக்கப்பட்டுள்ளதால் 'ஒரே இடச் சேவை' முறையில் திறம்பட செயற்பட முடியாத நிலை இருப்பதாகவும், இதனால் அனுமதி நடைமுறைகள் தாமதமடைவதாகவும் அறிக்கை கூறுகி றது. அரசுக்குச் சொந்தமான எரிசக்தி நிறுவனங்களின் செயற்றிறன் குறைபாடுகளும் தொழில்துறைக்கு செலவு குறைந்த எரிசக்தி வழங்குவதில் தடையாக இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சினோபெக்கின் 3.7 பில்லியன் டொலர் எண்ணெய் சுத்திகரிப்பு திட்டம் நிலுவையில் இருப்பதும், அதானி குழுமம் 400 மில்லியன் டொலர் காற்றாலைத் திட்டத்திலிருந்து விலகியதும் முதலீட்டுச் சூழலில் நிலவும் சவால்களுக்கு உதாரணங்களாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்நிலையில், வர்த்தக வசதிப்படுத்தல், எண்ணிமமயமாக் கல் மற்றும் வலுவான நிர்வாகக் கட்டமைப்புகள் உள்ளிட்ட கட்ட மைப்புச் சீர்திருத்தங்கள் அவசியம் என அமெரிக்க அறிக்கை வலியுறுத்துகிறது.

## ஆசிரியர் தலையங்கம் | 03 ஒக்ரோபர், 2026

### மக்கள் இறைமையின் அடையாளமாகிய திலீபனின் சிலை அகற்றல் மீண்டுமொரு இனஅழிப்பின் ஆரம்பமா?

சிறிலங்காவின் இன்றைய ஆட்சியாளர்களான தேசிய மக்கள் சக்தி தனது ஈழத்தமிழர் இறைமை தேசிய நீக்க செயல்திட்டத்தின் 2026 செப்டெம்பர் 27ஆம் திகதிய செயற்பாடாகத் "மானிட அரசியல் விடுதலைக்கான அதி உன்னத அடையாளமாகிய" தியாகதீபம் திலீபனின் திருவுருவச்சிலையை அவர் உயிர்த்தியாகம் செய்த நல்லூரில் இருந்து தன்னுடைய படையினர் மூலம் அகற்றி பண்பாட்டு இனஅழிப்பு செய்துள்ளது என்பதனை உலக இனமாக உள்ள ஈழத்தமிழர்கள் உலக மக்களுக்கும் உலகின் நாடுகளின் தலைவர்களுக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் எடுத்துரைக்க வேண்டும் என்பது இலக்கின் அழைப்பாகவுள்ளது.

அத்துடன் 02.10.2026 இல் அனைத்துலக அறவழிப்போராட்ட நாளை "வன்முறைக்கு இடமில்லையெனச் சொல்லுங்கள்" என உலகெங்கும் கொண்டாடும் ஐக்கிய நாடுகள் சபை, இக்காலகட்டத்தில் அறவழிப் போராட்டத்தையும் உலக அறவழிப்போராட்ட நாளையும் அவமதித்துள்ள சிறிலங்காவின் செயலைக் கண்டிக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையை வலியுறுத்த வேண்டுமென்று இலக்கு அனைத்துலக நாட்டுத் தலைவர்களையும் அறவழிப்போராட்ட உலகச் செயற்பாட்டாளர்களையும் கோருகிறது.

தாயகத்திலும் அனைத்துலகிலும் ஈழத்தமிழர்கள் தேசமாக தேசிய உணர்வுடன் தியாக தீபம் திலீபனின் உயிர்த்தியாகத்தின் 39 வது ஆண்டு நினைவேந்தலை 26.09.2026 இல் முன்னெடுத்த மறுநாள் காலையிலேயே நல்லிணக்கம் வேண்டுமென்னும் தேசிய மக்கள் சக்தியின் வாயளவு பேச்சின் உண்மைத்தன்மையை வெளிப்படுத்தும் செயலாகச் சிறிலங்காப் பொலிசார் அவரின் திருவுருவச் சிலையை அதனை நிறுவியவர்களுக்கோ அல்லது தற்காலிகமாக அதற்கு அனுமதித்த யாழ் மாநகரசபையின் முதல்வருக்கோ எந்தவித தகவலும் தெரிவிக்காது தன்னிச்சையாக அகற்றிச் சென்றமை, ஈழத்தமிழர்களின் வரலாற்றுத் தாயகத்தில் சிறிலங்காப் படையினது ஈழத்தமிழர்களைத் தாங்கள் எப்படியும் நடத்துவோம் என்னும் சிங்கள பௌத்த பேரினவாத இனவெறியில் இன்று வரை எவ்வித மாற்றமும் இல்லாது தொடர்கின்றது என்பதற்கான சமகால உதாரணமாக உள்ளது என்பதனை இலக்கு பதிவு செய்கிறது.

அத்துடன் ஈழத்தமிழர் மக்கள் இறைமையின் அடையாளமாகிய திலீபனின் திருவுருவச்சிலை அகற்றல் மீண்டுமொரு இனஅழிப்பின் அடையாளமா? என்கின்ற அச்சமும் இலக்குக்கு எழுகின்றது. இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கான ஈழத்தமிழரின் தாயகம் முழுவதும் திலீபனின் திருவுருவச் சிலை அகற்றலால் மக்கள் கிளர்ந்து எழுந்து திருவுருவச் சிலை அகற்றலுக்கு எதிராக நீதி கோரி மீளவும் திருவுருவச் சிலையை அதே இடத்தில் நிறுவுமாறு போராடி வருகின்றனர். இந்நிலையில் தேசிய மக்கள் சக்தியின் மீன்வளத்துறை அமைச்சரும் தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளருமான இராமலிங்கம் சந்திரசேகர் சிலை அகற்றப்பட்டதற்கும் அரசாங்கத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லையென அறிவித்தார்.

ஆயினும் அவரது கூற்று உண்மைக்கு மாறானது என்பதை வெளிப்படுத்தும் வகையில் சிறிலங்காவின் தேசிய மக்கள் சக்தியின் அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ 29.09.2026 இல் சிறிலங்காப் பொலிஸ் படையினரே நீதிமன்றத்தைக் கலந்தாலோசித்துச் சிலையினை அகற்றியதாக சிலை அகற்றலை அரசாங்கம் நியாயப்படுத்துகிறது என்கிற உண்மையை கொழும்பில் ஊடகவியலாளர்க்கு தெரிவித்தார். கூடவே அவர் "நாட்டின் சட்டம் தடைசெய்யப்பட்ட இயக்கம் ஒன்று தன் கொடியையோ சின்னத்தையோ வைத்து தன்னை வளர்க்க முற்படுவதை அனுமதிக்காது" என்கிற நியாயப்படுத்தலை ஊடகவியலாளர் மாநாட்டில் கூறியுள்ளார்.

1987 முதல் 2026 வரை 39 ஆண்டுகள் தியாகி திலீபனின் திருவுருவ நிழல்படங்கள் ஓவியங்கள் அனுமதிக்கப்பட்ட அதே நல்லூரில் திருவுருவம் வெண்கலச் சிலையாகப் பிரதியீடு செய்யப்பட்டவுடன்தான் அது தடை செய்யப்பட்ட இயக்க அடையாளமாகிறதா? தியாகி திலீபனின் திருவுருவம் அறவழிப் போராட்டத்தின் வலிமைக்கான உலக அடையாளம் என்பது கூட தேசிய மக்கள் சக்தியினருக்குத் தெரியவில்லையா?

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அமைச்சரவைப் பேச்சாளரே ஈழத்தமிழரின் அறவழிப்போராட்ட வரலாற்றின் அனைத்துலக ஒளிவீச்சாக தியாக தீபம் திலீபன் திகழ்கின்றார் என்ற உண்மையை மறுத்து, நல்லூரில் நடந்த அந்த உலக வரலாற்று நிகழ்வின் நினைவேந்தலையே தடை செய்யப்பட்ட இயக்கக் கொடியாகவும் சின்னமாகவும் சிறுமைப்படுத்தி வரலாற்றுத் திரிபுவாதத்தையே தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் பிரதிநிதியாகத் தொடர்ந்து முன்னெடுக்கிறது என்பதை மீண்டும் உலகிற்கு உறுதி செய்துள்ளார்.

அத்துடன் மக்கள் விடுதலை முன்னணியாக தனது ஆரம்பத்தைக் கொண்ட தேசிய மக்கள் சக்தி ஈழத்தமிழ் மக்கள் உடைய விடுதலை' இயக்கத்தை தடை செய்யப்பட்ட இயக்கமென "மக்கள் விடுதலை" என்ற அடிப்படைக்கோட்பாட்டுக்கே எதிராக தொடர்ந்தும் வைத்துக் கொண்டு எவ்வாறு எல்லா இலங்கை மக்களிடையிலும் நல்லிணக்கத்தையும் ஏற்புடைய மாற்றங்களையும் கொண்டு வர முடியும் என்கின்ற கேள்வி தேசிய மக்கள் சக்தி அமைச்சரவை பேச்சாளரின் நியாயப்படுத்தலைப் பார்க்கையில் இலக்குக்கு எழுகிறது. இதுதானா தேசிய மக்கள் சக்தியின் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்க முயற்சியா என்பதனைச் சிறிலங்காவின் பிரதமரிடமும் சிறிலங்காவின் அரசத்தலைவர் அநுரகுமார திசநாயக்காவிடமும் அனைத்து உலகிலும் உலக இனமாக உள்ள ஈழத்தமிழினம் கேட்க வேண்டும் என்பது இலக்கின் இவ்வாரக் கருத்தாகவுள்ளது.

மேலும் 1981இல் சிறிலங்கா அரசாங்கத்தின் யாழ்ப்பாண நூலக எரிப்பைக் கண்டித்து யாழ்ப்பாண மாவட்டத்தில் 80000 வாக்குகளை தனதாக்கி மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெற்ற தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதே பண்பாட்டு இனஅழிப்பு செயலை தியாக தீபம் திலீபனின் திருவுருவச் சிலையை அகற்றியதன் மூலம் செய்து தனது தேர்தல் பேச்சுக்கள் வெறும் கவர்ச்சி மொழிகள் என்பதனை தனக்கு வாக்களித்தவர்களுக்கே நிரூபித்துள்ளது என்பதனை இலக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறது.

இந்நிலையில் தியாகி திலீபனின் திருவுருவத்தை மீளவும் அவ்விடத்தில் நிலைநிறுத்துமாறு தாயகத்திலும் அனைத்து உலகிலும் ஈழத்தமிழர்கள் எழுப்பியுள்ள நீதிக்கான கோரிக்கையை தேசிய மக்கள் சக்தியின் அரசத்தலைவர் அநுரகுமார திசநாயக்கா நடைமுறைப்படுத்துவதே ஈழத்தமிழர்களின் மனங்களுக்கு அவரது படையினர் ஏற்படுத்தியுள்ள காயங்களுக்கான மருந்தாக அமையும் என்பது இலக்கின் எண்ணமாகவுள்ளது. இலண்டனில் 03.10.2026 சனிக்கிழமை மதியம் 3 மணிக்கு பிரித்தானியத் தமிழர்கள், பிரித்தானியப் பிரதமரின் 10ஆம் இலக்க இல்லத்திலிருந்து வெளிவிவகார அமைச்சு வரை, சிறிலங்காவின் தியாகி திலீபனின் திருவுருவச்சிலை அகற்றலை ஈழத்தமிழரின் அடிப்படை மனித உரிமைகள் மேலான வன்முறையாக வெளிப்படுத்திச் சிறிலங்காவைக் கண்டித்து பேரெழுச்சி கொண்டெழுவது ஈழத்தமிழரின் அடிப்படை மனித உரிமைக்கான உலக நீதிக்கான குரலாக அனைத்து உலக நாடுகளில் உள்ள ஈழத்தமிழர்களால் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும்.

இலங்கைத் தீவின் நவீன அரசியல் வரலாற்றில் 1921 இல் சிங்கள பெரும்பான்மை பிரித்தானிய காலனித்துவத்தால் நாட்டின் அரசியல் அதிகார சமூகமாக மாற்றப்பட்டது முதல் இன்று வரை, உலகம் அரசியல் சிக்கல்களையும் கொந்தளிப்புக்களையும் அனுபவிக்கும் காலகட்டங்களில், சிங்கள பௌத்த பேரினவாதம் தனது ஈழத்தமிழர்கள் மீதான மனித உரிமைகள் மீறல்களையும், மக்கள் உரிமைகள் மீறல்களையும், இனஅழிப்புச் செயற்பாடுகளையும் வேகப்படுத்தி, உலகின் கவனம் ஈழத்தமிழர் தேசிய பிரச்சினையில் கவனச்சிதைவு பெறுவதைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, ஈழத்தமிழர்களின் தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளை ஒடுக்குவது வரலாறாக உள்ளது. இன்றும் உலக அரசியல் பொருளாதாரம் பாதுகாப்பு அமைதி என்பன மிக மிகச் சிக்கலான நெருக்கடிகளை எதிர்நோக்கத் தொடங்கியுள்ள நிலையில் சிங்களப் பெரும்பான்மை ஈழத்தமிழர்களின் தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளை ஒடுக்கத் தயங்காது.

இதற்கு உதாரணமாகவே சிறிலங்காவின் மத்திய வங்கியின் 2026ஆம் ஆண்டுக்கான சமூக பொருளாதாரத் தரவு அறிக்கையில் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் படி வடமாகாணத்தின் மக்கள் தொகை 1150148 ஆக இருக்கையில் வடமாகாணத்தின் மக்கள் தொகை 557000 ஆக அரைவாசி மக்கள் தொகை குறைக்கப்பட்டு பதியப்பட்டுள்ளமை அமைகிறது. பலாலியில் தனியார் காணிகளில் இராணுவ வைத்தியசாலையும் வேகமாக கட்டமைக்கப்படத் தொடங்கியுள்ளது. இவைகள் மீண்டும் ஒரு ஈழத்தமிழினஅழிப்பு நடைபெற்றால் அதனை மூடிமறைப்பதற்கான முன்னேற்பாடா என்கிற நியாயமான சந்தேகத்தை எழுப்புகிறது. இந்நிலையில் ஈழத்தமிழர்கள் தமக்கு இடையில் உள்ள விருப்பு வெறுப்புக்களை மறந்து தாயகத்தையும் மக்களையும் காக்கும் நோக்கைப் பொதுநன்மையாகக் கருதி ஒன்றிணைதல் என்பது காலத்தின் தேவையாகிறது என்பது இலக்கின் கருத்தாகவுள்ளது. இதற்கு தியாகி திலீபனின் திருவுருவச் சிலை அகற்றலுக்கான நீதி கோரும் போராட்டத்தில் அனைத்து ஈழத்தமிழரும் ஒன்றிணைவது முதற்படியாக அமைய வேண்டும் என்பது இலக்கின் எண்ணமாகவுள்ளது.

**ஆசிரியர்**




போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களின் இழந்த உறவினர்களையும் தியாகிகளையும் தடையின்றி நினைவுகூருவதற்கான உரிமை முழுமையாக மதிக்கப்பட வேண்டும் என்று, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 63ஆவது கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை தொடர்பான அறிக்கையில் ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் மிகத் தெளிவாக வலியுறுத்தியுள்ளார்.



எனினும், ஐ.நாவின் சர்வதேசப் பரிந்துரைகளையும் தமிழ் மக்களின் பண்பாட்டு மற்றும் அரசியல் உரிமைகளையும் அப்பட்டமாக நிராகரிக்கும் வகையிலேயே நல்லூரில் அமைக்கப்பட்டிருந்த தியாக தீபம் திலீபனின் உருவச்சிலை பொலிஸாரால் பலவந்தமாக அகற்றப்பட்ட சம்பவம் அமைந்திருக்கின்றது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், தமிழ் மக்களின் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்படுவதில்லை என்றவாறான போலியான தோற்றப்பாடு தென்னிலங்கையிலும் சர்வதேச மட்டத்திலும் காண்பிக்கப்பட்டு வந்தது.

ஆனால், அந்தத் தோற்றப்பாடு முற்றிலும் பொய்யானது என்பதையும், தமிழ் மக்களுக்கு எதிரான கட்டமைக்கப்பட்ட ஒடுக்குமுறை புதிய ஆட்சியிலும் தொடர்கிறது என்பதையும் ஐ.நாவின் அறிக்கையும், தற்போது நல்லூரில் இடம்பெற்ற சம்பவமும் தெட்டத்தெளிவாக அம்பலப்படுத்தியுள்ளன.

### நிகழ்வுகளின் பின்னணியும் பொலிஸாரின் அராஜகமும்

யாழ். நல்லூரில் செப்டெம்பர் 15ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை தியாக தீபம் திலீபனின் 39ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் பெருந்திரளான மக்களின் பங்கேற்புடன் முன்னெடுக்கப்பட்டன.

இந்நினைவேந்தலை முன்னிட்டு நினைவிடத்தில் திலீபனின் உருவச்சிலை வைக்கப்பட்டிருந்தது. 12 நாட்களாக நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றபோது, பொலிஸார் ஒலிபெருக்கிகளைப் பறிமுதல் செய்ததைத் தவிர வேறு பெரிய இடையூறுகளை ஏற்படுத்தியிருக்கவில்லை.

ஆனால், நினைவேந்தல் நிகழ்வுகள் நிறைவடைந்த மறுநாளான செப்டெம்பர் 27ஆம் திகதி காலை 6.30 மணியளவில், இரண்டு வாகனங்களில் வருகை தந்த 15-க்கும் மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகள், நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவினருக்கு எவ்வித முன்னறிவித்தலும் வழங்காமல், அராஜகமான முறையில் பாதணிகளுடன் சென்று அச்சிலையைப் பலவந்தமாக எடுத்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவத்தைக் கண்டித்து நல்லூர் நினைவாலயத்திற்கு முன்பாக தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்றிணைந்து பாரிய கண்டனப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அநுர அரசாங்கத்தின் இரட்டை வேடம் கலைந்து விட்டது என்றும், பொலிஸாரின் அராஜகம் ஒழிய வேண்டும் என்றும் கோஷமிட்ட போராட்டக்காரர்கள், திலீபனின் சிலை மீள நிறுவப்படும் வரை தமது போராட்டம் தொடருமென எச்சரித்தனர்.

சிலை அகற்றப்பட்ட விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், அரசாங்கமும் பொலிஸ் தரப்பும் தங்களின் பொறுப்பைத் தட்டிக்கழிக்கும் வகையிலேயே முரண்பாடான விளக்கங்களை அளித்து வருகின்றன.

கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், இச்சம்பவத்திற்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும், மாநகர சபையும் பொலிஸாரும் தங்களின் எல்லைக்குட்பட்ட பணிகளைச் சரியாகச் செய்யாததன் விளைவே இது என்றும் கூறி அரசாங்கத்தைக் காப்பாற்ற முற்பட்டார்.

ஆனால், அரசாங்கப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ, தடை செய்யப்பட்ட அமைப்பின் சிலையை வைப்பது சட்ட விரோதம் என்றும், நீதிமன்றத்தில் முறையிட்ட பின்னரே பொலிஸாரால் இந்தச் சிலை அகற்றப்பட்டதாகவும் கூறுகிறார்.

அதேபோல பொலிஸ் பேச்சாளர் எஃப்.யூ. வூட்லர், தடை செய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினர் ஒருவரை நினைவுகூரும் வகையில் 'எல்லான் படை' என்ற குழு செயற்படுவதாகக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையிலும், இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தைப் பாதுகாக்கவும், யாழ். மாநகர சபையினால் செப்டெம்பர் 26 வரை மட்டுமே அனுமதி வழங்கப்பட்டிருந்ததாலும் சிலை அகற்றப்பட்டதாக நியாயப்படுத்துகிறார்.

அரசாங்கத்திற்கும் இதற்கும் தொடர்பில்லை எனில், பொலிஸாரின் நடவடிக்கைக்கு அரசாங்கப் பேச்சாளர் ஏன் முட்டுக் கொடுக்க வேண்டும்? பொலிஸார் தனித்து விளக்கம் அளித்திருக்க வேண்டிய விடயத்தில், அரசாங்கம் தலையிட்டுப் பேசுவதே இதில் அரசின் நேரடிப் பின்னணி இருப்பதை உறுதி செய்கிறது.

அமைச்சரும் பொலிஸாரும் கூறுவது போல திலீபன் தடை செய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினர் என்பது இங்கு முக்கியத்துவம் பெறும் விடயமாகும். 1987ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்குப் பின்னர் விடுதலைப் புலிகள் உள்ளிட்ட அனைத்துத் தமிழ் இயக்கங்கள் மீதான தடையும் நீக்கப்பட்டு, ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட அனைவருக்கும் அப்போதைய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவினால் பொது மன்னிப்பு அளிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடை நீக்கப்பட்டிருந்த அந்தச் சூழலில்தான், திலீபன் அகிம்சை வழியில் ஐந்தம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, நீராகாரமுமின்றி உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்து உயிர்நீத்தார்.

அவர் ஒரு ஆயுதப் போராளியாகப் போர்க்களத்தில் உயிரிழக்கவில்லை. மாறாக, காந்திய வழியில் தன்னுயிரை ஈகம் செய்தார். உயிரிழந்தபோது பயங்கரவாதியாகவோ அல்லது தடை செய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினராகவோ இல்லாத ஒருவரை, பல தசாப்தங்களுக்குப் பிறகு 'தடை செய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினர்' என முத்திரையிட்டு அவரது சிலையை அகற்றுவது எந்த வகையில் சட்டபூர்வமானதாகும்?

இதேநேரம், ஆட்சியில் அமர்ந்துள்ள ஜே.வி.பி. தனது சொந்த வரலாற்றை மறந்து செயற்படுகிறது. ஏனெனில் ஜே.வி.பி. இருமுறை அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட அமைப்பாகும். ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட அதன் தலைவர் ரோஹண விஜேவீர கொல்லப்பட்டபோது, ஜே.வி.பி. ஒரு தடை செய்யப்பட்ட அமைப்பாகும். அவர் ஒரு பயங்கரவாதியாகவே அறிவிக்கப்பட்டிருந்தார்.

## விதுரன்

ஆனால், ஜே.வி.பி. மீதான தடை நீக்கப்பட்ட பின்னர், ரோஹண விஜேவீரவுக்கு சிலைகள் வைக்கப்பட்டு, ஆண்டுதோறும் நினைவேந்தல்கள் பிரமாண்டமாக நடத்தப்படுகின்றன. தடை அமுலில் இருந்தபோது கொல்லப்பட்ட தமது தலைவரைத் தடை நீங்கிய பின் கொண்டாட முடிகிறது என்றால், உயிரிழந்தபோது தடையே இல்லாத ஒரு அமைப்பில் அஹிம்சை வழியில் உயிர்நீத்த திலீபனுக்கு ஏன் சிலை வைக்க முடியாது?

இச்சம்பவத்தையடுத்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், இலங்கைத் தமிழரசுக் கட்சியையும் அதன் தலைவர் சி.வி.கே. சிவஞானத்தையும் கடுமையாகச் சாடியுள்ளார். தமிழரசுக் கட்சியும் அநுர அரசாங்கமும் இணைந்தே இந்தச் சிலையை அகற்றியதாக அவர் குற்றம் சாட்டினார்.

எனினும், இக்குற்றச்சாட்டை மறுத்துள்ள யாழ். மாநகர சபை முதல்வர் மதிவதனி விவேகானந்தராஜா மற்றும் சி.வி.கே. சிவஞானம் ஆகியோர், மாநகர சபைக் கூட்டத்தில் 26-09-2026 வரை தற்காலிகமாகவே சிலை வைப்பதற்கு அனுமதி கோரப்பட்டதாகவும், அதனடிப்படையில் சபையின் ஏகோபித்த ஆதரவுடன் தற்காலிக அனுமதி வழங்கப்பட்டதாகவும் விளக்கமளித்துள்ளனர்.



மேலும், பொலிஸார் தொடர்ச்சியாக நெருக்குதல் அளித்து, சிலையை அகற்றுவதாக எழுத்துமூல உறுதிமொழி கேட்டபோதும் தாம் அதை வழங்கவில்லை என்றும், சிலை அகற்றப்பட்டதை தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் மாநகர சபை முதல்வர் தெரிவித்துள்ளார்.

மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் 'நினைவுத் தூபி அமைத்தல் என்பது நாட்டின் இறையாண் மையுடன் தொடர்புடைய விடயம் என்பதால் சபையில் தீர்மானம் நிறைவேற்ற முடியாது' என்று 2025ஆம் ஆண்டு கடிதம் திலீபனின் 38ஆவது நினைவேந்தலுக்கான கோரிக்கை விடுக்கப்பட்டபோது இதே மாநகர சபையின் முதல்வர் தான் கடிதம் மூலம் நிராகரித்திருக்கின்றார்.

இந்தப் பின்னணியில், 'தற்காலிக அனுமதி' என்ற கோரிக்கையைக்கூட சிலையை வைத்து விட்டுத்தான் கோரியதாகவும், அதனை நிராகரித்தால் தமிழரசுக் கட்சி அம்பலப்படும் என்றும் முன்னணியினர் வாதம் செய்கின்றனர்.

அதில் நியாயம் இல்லாமலும் இல்லை. ஏனென்றால் கொண்டுவந்து வைத்த சிலையை மீள அனுப்ப வேண்டாம் என்று சி.வி.கே. சிவஞானம் யாழ். மாநகர முதல்வருக்கு அறிவுரை அளித்துள்ளார். அது பொதுவெளியில் வெளிப்படுத்தப்பட்டும் உள்ளது.

எவ்வாறாயினும், தற்காலிக அனுமதி வழங்கப்பட்டதன் பின்னர் கால எல்லை முடிந்த கையோடு பொலி

தொடர்ச்சி: பக்கம் 13




## பா.அரியநேத்திரன்

1987 செப்டம்பர் 15 உண்ணாவிரதம் இருந்து 12 தினங்களால் 1987 செப்டம்பர் 26இல் உயிர் துறந்த தியாகி திலீபனின் நினைவு ஈழதேசம் எங்கும் ஒரு துயரம் தோய்ந்த சோக நாளாகவே அமைந்தது. லெப். கேணல் திலீபனின் இழப்பு அனைத்து தமிழர் மனங்களையும் வாட்டிவதைத்தது. 1987 ஜூலை 29 இலங்கை-இந்தியா ஒப்பந்தம் மூலம் ஈழத்தை ஆக்கிரமித்த இந்திய அரசின் வஞ்சகச் சதியால் மக்களுக்காக வாழ்ந்த அந்த ஒளிவிளக்கு ஓய்ந்தது.



இத்தோடு இந்தியத் துரோகச் சதி முடிந்துவிட்டது என்று மக்களின் மனத்தில் எண்ணங்கள் ஓடிக் கொண்டிருந்த நிலையில், சோகம் தணியும் முன்னே "மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த நிலை" ஈழத் தமிழினத்துக்கு ஏற்பட்டது. அதுவும் இந்திய அரசின் வக்கிரப்போக்கைக் கோடிட்டுக் காட்டிய இரண்டாவது பாரிய துயரம். தியாகி திலீபன் உயிர்நீத்து சரியாக 10 நாட்களால், 1987 அக்டோபர் 05இல், யாழ்ப்பாணக் கடற்பரப்பிலே பயணித்துக் கொண்டிருந்த லெப். கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன் உட்பட்ட பன்னிரு விடுதலைப்புலிப் போராளிகள் கைதுசெய்யப்பட்டு, அவர்களின் சாவுகளுக்கு இலங்கை அரசும் இந்திய அரசும் காரணமாகின.

இன்று 2026 அக்டோபர் 05 அவர்கள் ஆகுதியாகி 39ஆம் ஆண்டு நினைவு நாளாகும். இலங்கை-இந்திய ஒப்பந்தம் மூலம் தமிழ் மக்களுக்கு நன்மைகள் கிட்டும், இந்தியா எமக்கு ஒரு வழியைக் காட்டும் என நம்பியிருந்த மக்களுக்கு மாறாக, துன்பங்களையும் துயரங்களையுமே இலங்கை அரசும், இந்திய அரசுப் படைகளும் சுமத்தின.

1987 அக்டோபர் 03இல் யாழ். கடற்பரப்பிலே நிராயுதபாணிகளாக குமரப்பா, புலேந்திரன் உட்பட்ட பன்னிரு போராளிகள் படகில் பயணித்தனர்.

அன்று இலங்கைக் கடற்படையினரால் அவர்களைக் கைதுசெய்து பலாலி இராணுவ முகாமிற்கு கொண்டு சென்று விசாரணைகள் நடாத்திவிட்டு, பின் கொழும்பு கொண்டுசென்று அதன் மூலம் ஒரு சதி நாடகத்தை அரங்கேற்றலாம் என எண்ணிய இலங்கை பௌத்த பேரினவாத அரசு திட்டம் தீட்டியது.

பலாலி இராணுவ முகாமில் 12 போராளிகளும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளை மேற்கொண்ட இலங்கை அரசுப் படைகள் எவ்வித பலனையும் அடையவில்லை.

தமிழர்களின் காவலர்களாகவும், தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் உயிர்நாடியாகவும் இருந்த இவர்களைக் கைதுசெய்வதன் மூலம் தமிழ் மக்களையும் விடுதலைப் போராட்டத்தையும் அழித்துவிட எண்ணி பல சதிகளைச் செய்தனர். தடுத்து வைக்கப்பட்ட போராளிகளும் எந்தத் தளர்வுகளும் இன்றி தமிழர்களின் உரிமைக்காகவே வாதாடினார்கள். இரண்டு நாட்கள் பலாலி இராணுவ முகாமில் தடுத்துவைத்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறு அது நடைபெறும் சமநேரத்தில், விடுதலைப் புலிகள் அவர்களை மீட்டுவிட முடியும் என்ற நம்பிக்கையில் இந்தியப் படைகளுடன் பேச்சுவார்த்தையும் நடத்திப் பார்த்தனர்.

பன்னிரு போராளிகளையும் கொழும்பு சிறைச் சாலைக்குக் கொண்டு செல்ல அரசு திட்டமிட்டிருந்தது. அங்கிருந்த குமரப்பா தலைவர் பிரபாகரனுக்கு ஒரு கடிதம் எழுதினார்.

**கனம் தலைவர் அவர்களுக்கு,**

**குமரப்பா ஆகிய நான் 03.10.1987 அன்று அதி காலை 4.30 மணியளவில் சிறிலங்கா கடற்படையால் பருத்தித்துறை கடலுக்கு மேலாக வைத்துக் கைது செய்யப்பட்டேன். பின்பு காங்கேசன்துறை முகாமிற்கு கொண்டு வந்து, அங்கிருந்து பலாலி இராணுவ முகாமுக்கு இந்திய அமைதிப்படையினரின் கண்காணிப்பிலும், இலங்கை இராணுவத்தின் பாதுகாப்பிலும் இருக்கிறேன்.**

**மேலும் என்னைக் கொழும்பிற்குக் கொண்டு செல்ல நேரிடலாம். நான் இலங்கை அரசாங்கத்தின் சட்டங்களை அங்கீகரிக்கவில்லை. என்னைக் கொழும்பு கொண்டு செல்ல நேரும் பட்சத்தில் என்னை முழுமையாக அழித்துக் கொள்ளச் சித்தமாயுள்ளேன்.**

**"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"**

இவ்வாறு குமரப்பா, யாழ். மாவட்ட தளபதி, தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

1987 அக்டோபர் 05இல் பலாலி இராணுவ முகாமில் இருந்து கொழும்புக்கு அந்த 12 போராளிகளையும் கொண்டு செல்ல இராணுவம் முயற்சிகளை மேற்கொண்டபோது, 12 போராளிகளும் நஞ்சை (சயனைட்) அருந்தி பலாலி மண்ணில் உயிர்களைத் தியாகம் செய்தனர்.

### அந்த 12 விடுதலைப்புலிகளின் முழுமையான விபரம்:

**1. யாழ். மாவட்ட தளபதி**
**லெப். கேணல் குமரப்பா**
**(பாலசுந்தரம் இரத்தினபாலன் – வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்.)**
**2. திருமலை மாவட்ட தளபதி**
**லெப். கேணல் புலேந்திரன்**
**(குணநாயகம் தருமராசா – பாலையூற்று, திருகோணமலை.)**
**3. மேஜர் அப்துல்லா**
**(கணபதிப்பிள்ளை நகுலகுமார் – சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.)**
**4. கப்டன் பழனி**
**(பாலசுப்பிரமணியம் யோகேந்திரராசா – வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்.)**
**5. கப்டன் கரன்**
**(வைத்திலிங்கம் மனோகரன் – சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.)**
**6. கப்டன் மிரேஸ்**
**(தவராஜா மோகனராஜா – வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்.)**
**7. கப்டன் நளன்**
**(கணபதிப்பிள்ளை குணேந்திரராஜா – பருத்தித்துறை, யாழ்ப்பாணம்.)**
**8. லெப்டினன்ட் அன்பழகன்**
**(தேசோமயானந்தம் உத்தமசிகாமணி – வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்.)**
**9. லெப்டினன்ட் தவக்குமார்**
**(சோமசுந்தரம் பாக்கியராஜா – முள்ளியான், யாழ்ப்பாணம்.)**
**10. 2ம் லெப்டினன்ட் ரெஜினோல்ட்**
**(கபிரியேல் பேனாட் மரியநாயகம் – முள்ளியான், யாழ்ப்பாணம்.)**
**11. 2ம் லெப்டினன்ட் ஆனந்தகுமார்**
**(ஞானபிரகாசம் பிரான்சிஸ் அலோசியஸ் – மணற்காடு, யாழ்ப்பாணம்.)**
**12. கப்டன் ரகுவப்பா**
(**இராஜமாணி**க்கம் ரகுமான் – வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்.)

வீரச்சாவடைந்த பன்னிரு விடுதலைப்புலிகளின் வித்துடல்களும் யாழ்ப்பாணம் வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வல்வெட்டித்துறை நகரசபைப் பகுதியில் அமைந்துள்ள தீருவில் ஊருக்கு எடுத்து வரப்பட்டு, பல்லாயிரக்கணக்கான மக்கள், போராளிகள் முன்னிலையில் அக்கினியில் சங்கமமாகின.

காந்தி தேசத்துக்குக் காந்தியின் காந்தீயம் புரியும் என நினைத்தது திலீபன் மட்டுமல்ல. ஈழத் தமிழினமே நம்பிக்கையோடு திலீபனின் தவம் பலித்துத் தமிழீழ வரம் கிடைக்கும் என இலவு காத்த கிளியாகக் காத்திருந்தது. வந்து பார்த்துப் போன இந்தியத் தூதுவர் டிக்ஸிற்றும் இந்தியத் தூதுவராக நடக்காது ஜே.ஆரின் சிங்களத் தூதுவராகவே நடந்து கொண்டார். திம்புவில் பேசியதும் தமிழர் தரப்பை இந்தியா தண்டிக்க முயன்றதும் தமிழரது நியாயமான கோரிக்கைகள் சேரும் இடம் குப்பைக் கூடைதான் என்பதை உணரத் தவறிய இனமாகத் தமிழினம் மாறிவிட்டது.



திலீபனின் உயிரைக் குடித்த அதே இலங்கை-இந்திய ஒப்பந்தமும், இந்தியாவின் மீதுள்ள மதிப்பும் மீண்டும் கரங்களைக் கட்டிய காரணத்தால் இந்தப் 12 பேரும் சிங்களத்தின் சிறைக் கைதிகளாயினர். அவர்களைச் கொழும்புக்குக் கொண்டு போய் விசாரணை என்ற பெயரால் சித்திரவதை செய்ய முற்பட்ட சிங்களத்தை இந்தியப் பேரரசால் தடுத்து நிறுத்த முடியவில்லை, அல்லது விரும்பவில்லை.

இந்திய அரசுடன் 1987 ஜூலை 29ஆம் திகதி செய்து கொண்ட ஒப்பந்த விதிகளின்படி தமிழீழ விடுதலைப் புலிகள் தற்காப்புக்காக ஆயுதங்கள் வைத்திருப்பதை அனுமதிக்கிறது எனச் சுட்டிக் காட்டியும் பயனற்றதால், 12 பேரும் அக்டோபர் 05ஆம் திகதி நஞ்சுக் குப்பியைக் கடித்தனர்.

தியாகி திலீபனின் உண்ணாவிரதத்தை ஏற்காத இந்தியச் சதி, லெப்டினன்ட் கேணல் குமரப்பா மற்றும் லெப்டினன்ட் கேணல் புலேந்திரன் உட்பட 12 விடுதலைப் புலிகளை இலங்கைப் படையினரிடம் இந்திய அரசு ஒப்படைக்க நினைத்த சதி, இந்த இரண்டு சதிகளினால்தான் 1987 அக்டோபர் 10இல் இந்திய அமைதிகாக்கும் படைக்கும் (IPKF) தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் (LTTE) இடையே முறையான முழுப் போர் தொடங்கியது.

1987,அக்டோபர்,10, இல் இந்திய படையுடன் ஆரம்பித்த போரை விடுதலைப்புலிகள் முதலாம் கட்ட

**தொடர்ச்சி: பக்கம் 11**



# ஈழத் தமிழர்களின் இன்றைய நிலைக்குச் சாட்சியாகத் திலீபன்

தீபச்செல்வன்

தியாக தீபம் திலீபனின் 39ஆவது நினைவேந்தல் முடிந்த மறுநாளே நல்லூரில் வைக்கப்பட்டிருந்த அவரது சிலையை இலங்கைப் பொலிஸார் அகற்றியிருக்கிறார்கள். பன்னிரண்டு நாட்கள் உணவும் நீரும் இன்றி உயிரைத் தியாகம் செய்த ஒரு தியாக வீரனின் நினைவாக வைக்கப்பட்ட சிலை பன்னிரண்டு நாட்கள்கூட அந்த மண்ணில் நிற்கவில்லை. செப்டெம்பர் 15ஆம் திகதி நினைவேந்தல் ஆரம்பமானபோது வைக்கப்பட்ட சிலை, செப்டெம்பர் 26ஆம் திகதி நினைவேந்தல் முடிந்த மறுநாள் அகற்றப்பட்டது. காவல்துறை நீதிமன்றத்தில் விடயங்களை அறிக்கையிட்டதன் பின்னரே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அரசாங்கம் கூறுகிறது. தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பை ஊக்குவிக்கும் அடையாளங்கள் தொடர்பான சட்டத்தை நடைமுறைப்படுத்தியதாகவும் அரசாங்கத் தரப்பு விளக்கம் அளித்துள்ளது.

## தலைமுறைகளால் மறக்க முடியாத தியாகம்

ஆனால் இந்தச் சம்பவத்தை ஒரு சிலை அகற்றப்பட்ட செய்தியாக மட்டும் கடந்து செல்ல முடியாது. ஏனெனில் திலீபன் என்பது தமிழ் மக்களின் மனங்களில் தீயென நினைவில் உள்ள பெயர். 1987ஆம் ஆண்டு நல்லூர் மண்ணில் தனது உடலையே போராட்டமாக மாற்றிய இளைஞனின் பெயர். செப்டெம்பர் 15ஆம் திகதி ஆரம்பித்த அவரது உண்ணாவிரதம் செப்டெம்பர் 26ஆம் திகதி தியாகச் சாவில் முடிந்தது. உணவும் நீரும் மறுத்து மரணத்தை எதிர்கொண்டு அவர் முன்வைத்த கோரிக்கைகள் அன்றைய தமிழ் மக்களின் அரசியல், பாதுகாப்பு, காணி, இராணுவமயமாக்கல் மற்றும் அரசியல் கைதிகள் தொடர்பான அன்று ஈழ மக்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளில் இருந்து எழுந்தவை. இன்றும் அவை தொடர்கின்றன என்பதே உண்மை.

இறந்தவர்களை நினைவுகூர்வது மனித சமூகத்தின் தொன்மையான பண்பாடு. அந்த நினைவு குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் வரலாற்றிற்கும் உரியது. அதிலும் ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் நினைவேந்தல் என்பது தமிழர் பாரம்பரியமாகும் ஈழ விடுதலைப் போராட்டத்தின் முக்கிய வெளிப்பாடாகவும் இருக்கிறது. அத்துடன் இந்த நினைவேந்தல் உரிமையை அனைத்துத் தரப்புகளுக்கும் உரித்துடைய, மறுக்கப்பட முடியாத உரிமை என்பதை பன்னாட்டுச் சட்டங்கள் வலியுறுத்துகின்றன. அரசுக்கு எதிராக விடுதலைப் புலிகள் போராடினாலும் அவர்களை நினைவுகொள்ளும் உரிமை ஈழத் தமிழ் மக்களுக்கு உண்டு.

## சிங்களவர்களை ஈர்த்த திலீபன்

அத்துடன் திலீபனைப் பற்றிய பார்வை தமிழர்களுக்குள் மட்டுமே இருப்பதாகவும் சொல்ல முடியாது. சிங்கள மக்களிடையேயும் திலீபனின் தியாகத்தை வேறொரு பார்வையில் புரிந்துகொள்ளும் குரல்கள் இருந்துள்ளன. சில சிங்களக் கவிஞர்கள் அவரைப் பற்றி எழுதியுள்ளனர். திலீபனின் உண்ணாவிரதத்தைப் பற்றிய பாடல்களும் சிங்கள சமூகத்தில் கவனம் பெற்றுள்ளன. தமிழ் மக்களின் துயரத்தையும் அரசியல் கோரிக்கைகளையும் மனித உணர்வின் வழியாகப் புரிந்துகொள்ள முயன்ற சிங்களர்களும் இருந்துள்ளனர்.

ஆனால் இன்று தென்னிலங்கையில் எழும் சில குரல்கள் வேறொரு முகத்தை வெளிப்படுத்துகின்றன. திலீபனின் நினைவேந்தலைப் பயங்கரவாதத்தைப் போற்றுவதாகக் காட்டி சந்தர்ப்ப அரசியல் செய்ய முனைகின்றன. அவரது சிலையை ஒரு அரசியல் அச்சுறுத்தலாகச் சித்தரிக்கிறார்கள். ஒரு இளைஞன் ஆயுதத்தைத் தேர்ந்தெடுக்காமல் உண்ணாவிரதத்தைத் தேர்ந்தெடுத்த இறுதி பன்னிரண்டு நாட்களை நினைவுகூர்வதற்கும், அவர் சார்ந்திருந்த இயக்கத்தின் முழு அரசியலை ஆதரிப்பதற்கும் இடையில் உள்ள வேறுபாட்டை அழித்துவிடும் முயற்சி என்பதை நாம் இங்கே உணர வேண்டும்.

## அனுர அரசின் இரட்டை முகம்

ஆனால் இதில் ஸ்ரீலங்கா அரசின் அணுகுமுறைதான் வேடிக்கை தருகிறது. அத்துடன் இங்கே பெரிய அரசியல் முரண்பாடும் வெளிப்படுகிறது. வடக்கு-கிழக்கில் தேர்தல் காலங்களில் தமிழ் மக்களின் உணர்வுகளோடு பேசப்பட்ட அரசியல் மொழியை நாம் மறந்துவிடவில்லை. வல்வெட்டித்துறையில் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்குச் சிலை வைப்போம் என்றும், இறங்குதுறைக்கு அவரது பெற்றோரின் பெயரை வைப்போம் என்றும் பாடல்களில் பேசப்பட்டன. அந்தப் பாடல்கள் தமிழ் மக்களின் தேசிய உணர்வைத் தொட்டன. அந்த அரசியலை நம்பி வடக்கு-கிழக்கில் மக்கள் தமது வாக்குகளை வழங்கினர். இன்று அந்த மக்களின் நினைவேந்தல் உரிமையே கேள்விக்குள்ளாகிறது. தேர்தலில் தமிழ் மக்களின் வரலாறு வாக்காகத் தேவைப்படுகிறது; ஆட்சியில் அதே வரலாறு அச்சுறுத்தலாக மாறுகிறது என்றால், இந்த முரண்பாட்டுக்கு என்ன பெயர் கொடுப்பது?



தமிழர்களின் நினைவுகளையும் அரசியல் உணர்வுகளையும் தேர்தல் காலங்களில் ஏற்றுக்கொண்டு, ஆட்சிக்குப் பின்னர் அவற்றைத் தடுக்க முயல்வது மக்களிடம் நேர்மையான அரசியலாக இருக்க முடியாது. மக்களின் வாக்கைப் பெறுவதற்காக அவர்களுடைய வரலாற்றைத் தொடுவது எளிது. ஆனால் அந்த வரலாற்றை மக்கள் நினைவுகூரும் உரிமையைப் பாதுகாப்பதே உண்மையான ஜனநாயகத்தின் சோதனை.

## சர்வதேசம் என்ன செய்யும்?

இலங்கை அரசாங்கம் தாம் போரில் உயிரிழந்த அன்புக்குரியவர்களை நினைவுகூரும் உரிமையை ஏற்றுக் கொள்வதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தெரிவித்திருக்கிறது. ஆனால் நினைவேந்தல் பயங்கரவாதத்தைப் போற்றுவதற்காகப் பயன்படுத்தப்படக் கூடாது என்பதே தமது வரம்பு என்றும் அரசாங்கம் கூறியுள்ளது. அதேவேளை, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வடக்கு-கிழக்கில் அமைதியான நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடுக்க சட்டப்பிரிவுகள் தவறாகப் பயன்படுத்தப்படுவது குறித்து கவலை வெளியிட்டிருக்கிறது. நினைவேந்தல் நிகழ்வுகளில் அமைதியாக ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்டங்களைப் பயன்படுத்துவது தொடர்பாக ஆணைக்குழு காவல்துறையிடம் கேள்வி எழுப்பியுள்ளது.

ஐக்கிய நாடுகளின் சிறப்பு நடைமுறை நிபுணர்களும் தமிழ் சிவில் சமூகத்தின் நினைவேந்தல் நடவடிக்கைகளுக்கு விதிக்கப்பட்ட தடைகள் குறித்து இலங்கை அரசாங்கத்திடம் தகவல் கேட்டிருக்கின்றனர். கருத்துரிமை, அமைதியான ஒன்றுகூடல், சங்கச்சுதந்திரம் மற்றும் கலாசார உரிமைகளுடன் இந்தக் கேள்வி தொடர்புபட்டிருப்பதாக சர்வதேச மனித உரிமை அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

## இப்போதும் சாட்சியாகத் திலீபன்

திலீபன் முன்வைத்த கோரிக்கைகளை இன்றைய வடக்கு-கிழக்கின் நிலைமையோடு வைத்துப் பார்க்கும்போது, அவை வரலாற்றின் ஒரு பழைய பக்கமாக மாத்திரம் இல்லை. அரசியல் கைதிகள் தொடர்பான கேள்விகள் இன்னும் எழுகின்றன. வடக்கு-கிழக்கின் இராணுவமயமாக்கல் தொடர்பான கேள்விகள் இன்னும் தொடர்கின்றன. காணி, குடியேற்றம், அரசியல் அதிகாரம், தமிழர்களின் பாதுகாப்பு, அடையாளம் ஆகியவை இன்னும் முழுமையாகத் தீர்ந்து விடவில்லை. அதனால்தான் திலீபனின் நினைவு ஆண்டு தோறும் திரும்பி வருகிறது. அவர் வாழ்ந்த காலத்தைவிட அவர் எழுப்பிய கேள்விகள் இன்றும் அரசின் முன் ஒலிக்கின்றன.

நல்லூரில் சிலை அகற்றப்பட்ட இடத்தில் மலர் வைக்கும் மக்களின் கைகளைக் காண்கிறோம். நினைவு கூரும் மக்களின் கண்ணீரும் அங்கு இருக்கிறது. 39 ஆண்டுகளுக்கு முன்னரே தேசத்துடன் கலந்துவிட்ட திலீபனின் நினைவிடம் பலமுறை அழிக்கப்பட்டிருக்கிறது. நினைவுச் சின்னங்கள் இடிக்கப்பட்டிருக்கின்றன. இப்போது மீண்டும் சிலை அகற்றப்பட்டுள்ளது. ஆனால் ஒவ்வொரு முறையும் ஒரு நினைவுச் சின்னம் அகற்றப்படும்போது, அந்த நினைவு இன்னும் ஆழமாக மக்களின் மனங்களில் நிலைபெற்றிருக்கிறது. இப்போதும் உலகம் முழுவதும் திலீபனின் நினைவும் உருவமும் பெரிதாகப் பதிந்துள்ளதுடன், இன்று சிலை இல்லாத நல்லூர் நினைவிடம் ஈழத் தமிழ் மக்களின் இன்றைய நிலையின் சாட்சியாகவும் மாறியுள்ளது.

• • •

## மேற்குக் கரைத் ... தொடர்ச்சி...

இதனிடையே, ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை மற்றும் காசாவில் நிலங்களைக் கைப்பற்றும் கொடூரமான நடவடிக்கைகளுக்காக இஸ்ரேலியத் தலைமையை அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் ஜோவாகின் காஸ்ட்ரோ கடுமையாகச் சாடியுள்ளார். மேலும், குற்றவாளிகளை அமெரிக்கச் சந்தையிலிருந்து துண்டிப்பதற்காகக் கடுமையான பொருளாதாரத் தண்டனைகளை விதிக்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

குடியேற்றங்களைத் தடுக்கும் சட்டத்தின் பின்னணியில் உள்ள ஒரு முன்னணி ஜனநாயகக் கட்சி சட்டமன்ற உறுப்பினராக, காஸ்ட்ரோ பாலஸ்தீனியர்களின் இடப்பெயர்ச்சிக்கு எதிரான சட்டரீதியான அழுத்தத்தை அதிகரித்து வருகிறார்.

“நெதன்யாகுவின் அரசாங்கத்தின் கீழ், குடியேறிகள் பாலஸ்தீனியர்களை அவர்களின் நிலத்திலிருந்து பிரிக்கும் ஒரு வன்முறை நில அபகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்” என்று அவர் X தளத்தில் எழுதினார்.

“தடைகள் அதைத் தடுக்க உதவும்” என்றும் அவர் மேலும் கூறினார். “குடியேற்றங்களைத் தடுக்கும் சட்டம், மேற்குக் கரை அல்லது காசாவில் பாலஸ்தீனிய நிலத்தைக் கைப்பற்ற விரும்பும் எந்தவொரு நபருக்கும் அல்லது நிறுவனத்திற்கும் ஒரு தேர்வை வழங்குகிறது: நீங்கள் குடியேற்றங்களைத் தொடர்ந்தால், அமெரிக்காவுடன் வணிகம் செய்ய முடியாது.”



# எல் நினோ தாக்கமும் கிழக்கு மாகாணம் எதிர்கொள்ளும் காலநிலைச் சவால்களும்

எல் நினோ தாக்கம் என்பது இன்று உலகளாவிய தாக்கமாகக் காணப்படுகின்றது. காலநிலையில் ஏற்பட்டுள்ள கடும் வெப்ப மாற்றத்தினை அடிப்படையாகக் கொண்டு இன்று எல் நினோ பல்வேறு வகைப்படுத்தப்பட்டு பல்வேறு காரணகாரியங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.

வடகிழக்கினைப் பொறுத்தவரையில் எல் நினோ தாக்கம் என்பது மிகவும் பரந்துபட்ட தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளதைக் காணமுடிகின்றது. இயற்கையின் உறைவிடம் என்ற பெருமையினைக் கொண்ட கிழக்கு மாகாணத்தில் இந்த எல் நினோ தாக்கம் என்பது மிகவும் பாரிய தாக்கமாக மாற்றம் பெற்றுள்ளது.

கடந்த 35 வருடங்களுக்கு மேலாக தமிழர்கள் எதிர்கொண்ட யுத்த சூழ்நிலையும், அதனைக் காரணம் காட்டி கிழக்கில் அழிக்கப்பட்ட தமிழர்களின் இயற்கைப் பகுதிகளும் இன்று கிழக்கு மாகாணத்தில் இந்தத் தாக்கத்தின் வீரியம் வெளிப்படுத்தி நிற்கின்றது.



காலநிலை மாற்றத்தின் தாக்கம் என்பது வெறும் சூழ்நிலையியல் சார்ந்த ஒன்றாக மட்டும் அல்லாமல், மனித வாழ்வியலின் ஒவ்வொரு அம்சத்தையும் நேரடியாகப் பாதிக்கும் ஒன்றாக மாறியுள்ளது. உலகின் துருவப் பகுதிகளில் உள்ள பனிப்பாறைகள் மற்றும் பனிமலைகள் விரைவாக உருகி வருவதன் காரணமாகக் கடல் மட்டம் உயர்ந்து, கடலோரப் பகுதிகள் மற்றும் தீவுகள் மூழ்கும் ஆபத்தைச் சந்தித்து வருகின்றன. மேலும், சீரற்ற மழைப்பொழிவு, திடீர் வெள்ளப்பெருக்கு, தீவிர வறட்சி மற்றும் வழக்கத்திற்கு மாறான வெப்ப அலைகள் போன்றவை உலகம் முழுவதும் விவசாய உற்பத்தியைக் கடுமையாகப் பாதித்து உணவுப் பற்றாக்குறையை உருவாக்குகின்றன.

சுற்றுச்சூழலில் ஏற்படும் இந்தத் திடீர் மாற்றங்கள் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் இயற்கையான வாழ்விடங்களை அழித்து, பல அரிய உயிரினங்களை அழிவின் விளிம்பிற்குத் தள்ளியுள்ளன. பெருங்கடல்களின் வெப்பநிலை உயர்வால் பவளப்பாறைகள் வெளுத்துப் போவதுடன், கடல்சார் உயிரினங்களின் சமநிலையும் குலைந்துள்ளது. மேலும், சுத்தமான குடிநீர் பற்றாக்குறை, புதிய வகை தொற்றுநோய்களின் பரவல் மற்றும் சீற்றங்களால் வீடுகளை இழந்து மக்கள் இடம்பெயர்தல் போன்ற சமூகப் பொருளாதாரச் சிக்கல்களும் தீவிரமடைந்து வருகின்றன.

காலநிலை மாற்றத்தின் தீவிரத்தைக் குறைக்கவும், அதன் பேரழிவுகளிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் உலகளாவிய அளவிலும், தேசிய அளவிலும் உடனடித் தற்காப்பு நடவடிக்கைகள் அவசியமாகின்றன. முதற்கட்டமாக, கரிம உமிழ்வைக் குறைப்பதற்காக நிலக்கரி மற்றும் பெட்ரோல் பயன்பாட்டைக் குறைத்து, சூரிய ஒளி, காற்று சக்தி மற்றும் நீர்மின் சக்தி போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களுக்கு மாறுவது இன்றியமையாதது. அரசுகள் பசுமை ஆற்றல் திட்டங்களுக்கு அதிக முதலீடுகளைச் செய்வதுடன், தொழிற்சாலைகளின் கழிவு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தும் கடுமையான சட்டங்களை அமுல்படுத்த வேண்டும். இவ்வாறான நிலையிலேயே இன்று எல் நினோ தாக்கம் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தப்போகின்றது, அதற்கான நாங்கள் முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகள் குறித்து ஆராய வேண்டிய நிலையிருக்கின்றது.

இன்று இந்த எல் நினோ தாக்கத்தினால் ஏற்படப்போகும் மாற்றங்களை மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளவர்கள் விளங்கிக்கொண்டு அதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும். காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப தமது செயற்பாடுகளை எதிர்காலத்தில் முன்னெடுக்கும்போதே, எதிர்காலத்தில் இந்தக் காலநிலை மாற்றத்திற்கு ஏற்றாற்போல் செயற்பாடுகளை முன்கொண்டு செல்ல முடியும்.

எல் நினோ தாக்கமானது மூன்று முக்கிய காலகட்டங்களாகப் பிரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படுகின்றது. ஜூலை முதல் செப்டம்பர் வரையிலான வறண்ட காலகட்டம், அக்டோபர் முதல் டிசம்பர் முற்பகுதி வரையிலான பெருமழை, வெள்ளப்பெருக்கு மற்றும் புயல் அபாயம் நிறைந்த காலகட்டம், மற்றும் டிசம்பர் நடுப் பகுதி முதல் நீடிக்கும் வறண்ட காலகட்டம் என இவை அமைகின்றன.

தற்போது பெருமழை மற்றும் வெள்ளப்பெருக்குக்குரிய இரண்டாவது காலகட்டத்திற்குள் நுழையும் நிலை ஏற்பட்டுள்ளது. இக்காலகட்டத்தில் வங்காள விரிகுடாவில் உருவாகக்கூடிய குறைந்த அழுத்த மண்டலங்கள் மற்றும் வடகிழக்குப் பருவக்காற்று காரணமாக குறைந்தது ஏழு தாழமுக்கங்கள் வரை தோன்றுவதற்கு வாய்ப்புள்ளது. இதனால் கிழக்கு மாகாணம், குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டம் பெருமழை மற்றும் வெள்ளப்பெருக்கினால் அதிகம் பாதிக்கப்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிறுபோக மற்றும் பெரும்போக விதைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கும் காலகட்டம் இதுவாகும். பெருமழை மற்றும் வெள்ளப்பெருக்கிலிருந்து பயிர்களைப் பாதுகாக்க விவசாயிகள் அக்டோபர் மாதம் ஐந்தாம் தேதிக்குள் தங்களது விதைப்பு நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். ஆரம்பத்தில் கிடைக்கக்கூடிய வெப்பச்சலன மழையைப் பயன்படுத்தி புழுதி விதைப்பை மேற்கொள்ள வேண்டும். குளங்களின் நீர்ப்பாசன வசதிகள் நவம்பர் நடுப்பகுதியிலேயே ஆரம்பிக்கும் என்பதால், அதுவரை மழையை நம்பியே விவசாயம் செய்ய வேண்டியுள்ளது. டிசம்பர் மாதத்திற்குப் பிறகு மழை குறையும் என்பதால், நவம்பர் இறுதிக்குள் பயிர்களைப் பாதுகாக்கும் வகையில் கால அட்டவணையைத் திட்டமிட வேண்டும். விவசாயத் திணைக்களம் மற்றும் கமநலச் சேவைத் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றிச் செயல்படுவதன் மூலம் பொருளாதார இழப்புகளைக் கணிசமாகக் குறைக்க முடியும்.

வடகிழக்குப் பருவக்காற்றுக் காலத்தில் விவசாயிகள் சந்திக்கும் சவால்களுக்கு இணையான பாதிப்புகளை மீனவர்களும் எதிர்கொள்கின்றனர். தாழமுக்கங்கள் மற்றும் சூறாவளிக் காற்றுச் சுழற்சிகள் நிகழும்போது கடல் கொந்தளிப்பாகக் காணப்படும். எனவே, கடற்றொழில் திணைக்களத்தின் வானிலைச் சூழ்நிலைகள் மற்றும் எச்சரிக் கைகளைத் தொடர்ச்சியாகக் கவனித்து, அபாயகரமான காலங்களில் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும். இது உயிர்ச்சேதங்கள் மற்றும் படகுச் சேதங்களைத் தடுக்க உதவும்.

வெள்ளப்பெருக்கு மற்றும் இடி மின்னல் தாக்கங்களிலிருந்து பொதுமக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முன்கூட்டியே செய்ய வேண்டும். வீடுகளுக்கு மேலேயும் வீதிகளிலும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய மரங்களின் கிளைகளை அக்டோபர் ஐந்தாம் தேதிக்குள் வெட்டி அகற்ற வேண்டும். வெள்ளநீர் தேங்கக்கூடிய வாய்க்கால்கள் மற்றும் வடிகான்களைத் துப்புரவு செய்து, நீர் சுலபமாக வழிந்தோட வழிவகை செய்ய வேண்டும். மழை மற்றும் இடி மின்னல் காலங்களில் திறந்தவெளிகளிலோ, மரங்களின்

**மட்டு.நகரான்**

நிழலிலோ தஞ்சம் அடைவதைத் தவிர்த்து, பாதுகாப்பான கூரையுள்ள கட்டடங்களுக்குள் இருக்க வேண்டும். மேலும், முகத்துவாரங்களை உரிய நேரத்தில் வெட்டி நீரை வெளியேற்ற அனைத்துத் தரப்பினரும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும் என அனர்த்த முகாமைத்துவ நிலையமும் வானிலை தொடர்பான விற்பன்னர்களும் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு பிராந்தியம் நிலப்பரப்பு ரீதியாகப் பெருமழையினாலும், மத்திய மலைநாட்டிலிருந்து வரும் ஆற்று நீரினாலும் இருவழி வெள்ளப் பாதிப்புகளைச் சந்திக்கின்றது. இதற்கு நிரந்தரத் தீர்வாக முந்தெனியாறு திட்டம் மற்றும் உறுகாமம் - கித்துல் ஓயா இணைப்புத் திட்டங்களை விரைவாகச் செயற்படுத்த வேண்டும். இத் திட்டங்கள் வெள்ளப் பாதிப்பைக் குறைப்பது மட்டுமன்றி, வறட்சிக் காலங்களில் நீர் பற்றாக்குறையைத் தீர்க்கவும் விவசாய உற்பத்தியைப் பெருக்கவும் பெரும் துணையாக அமையும். அரச அதிகாரிகள், திணைக்களங்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து செயல்படுவதன் மூலம் வரவிருக்கும் காலநிலைச் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு உயிர்களையும் உடைமைகளையும் பாதுகாக்க முடியும்.



காடுகளைப் பாதுகாப்பதும் புதிய மரங்களை நடுவதுமே கார்பனை உறிஞ்சுவதற்கான மிகச் சிறந்த இயற்கை வழியாகும். அழிக்கப்பட்ட காடுகளை மீளுருவாக்கம் செய்தல், நகரப் பகுதிகளில் பசுமைப் பகுதிகளை அதிகரித்தல் மற்றும் நிலையான வன நிர்வாகக் கொள்கைகளைப் பின்பற்றுதல் போன்றவை புவியின் வெப்பநிலையைக் குறைக்க உதவும். விவசாயத் துறையிலும் சொட்டுநீர்ப் பாசனம், இயற்கை உரப் பயன்பாடு மற்றும் காலநிலை மாற்றத்தைத் தாங்கும் பயிர் ரகங்களை அறிமுகப்படுத்துதல் போன்ற தற்காப்பு உத்திகளைக் கையாள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

காலநிலை மாற்றம் என்பது ஏதோ ஒரு நாட்டின் அல்லது ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் தனிப்பட்ட பிரச்சினை அல்ல; அது ஒட்டுமொத்த மனித குலத்தின் வாழ்வியல் சவாலாகும். நாம் வாழும் இந்தப் பூமி நமக்கானது மட்டுமல்ல, நமது எதிர்காலச் சந்ததியினருக்கும் சொந்தமானது என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும். “இயற்கையைக் காத்தால் இயற்கை நம்மைக் காக்கும்” என்ற பொன்மொழிக்கேற்ப, நாம் அனைவரும் பொறுப்புணர்வுடன் செயல்பட்டு, சுற்றுச் சூழல் பாதுகாப்பை நம் கடமையாகக் கொண்டு செயல்பட்டால் மட்டுமே பசுமையான மற்றும் பாதுகாப்பான எதிர்காலத்தை உறுதி செய்ய முடியும்.

• • •




# இனவாதத்தை எதிர்கொள்ளும் மலையகத் தியாகம்

மருதன் ராம்

சமீபத்தில் இலங்கையின் பிரபல பாடகி யோஹானியின் இசை நிகழ்ச்சி ஒன்றை அடுத்து “எமது கொடி எமது மொழி எமது இசை” என்ற பேஸ்புக் பதிவை அடிப்படையாகக் கொண்டு, அமா எதிரிசிங்க என்ற பெண் வெளியிட்ட கருத்து சமூக வலைத்தளங்களில் மாத்திரமன்றி, இலங்கைத் தமிழ் சமூகத்தினரிடையேயும் பெரும் அதிர் வலைகளையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. தேசிய அடையாளத்தை வெளிப்படுத்தும் நோக்கில் இடப் பட்ட அப்பதிவை பகிர்ந்துள்ள அமா எதிரிசிங்க என்ற பெண் வெளியிட்ட கருத்து, தற்போது இலங்கைத் தமிழ் சமூகத்தினரிடையேயும் சமூக வலைத்தளங்களிலும் பேரதிர்வலையையும் கடுமையான கொந்தளிப்பையும் ஏற் படுத்தியுள்ளது.

**அமா எதிரிசிங்க தனது பதிவில்:**

“கழிவறைகளைச் சுத்தம் செய்யவும் தேயிலை பறிக்கவும் இங்கு வந்தவர்கள், இப்போது இந்த இடத்தையே தாங்கள்தான் நடத்துவது போல நடந்துகொண்டு பேசும் அபத்தமான பேச்சைப் பாருங்கள். சொல்லப்போனால், அவர்கள் தங்கள் கற்பனையிலேயே ஒரு தனி நாட்டையே உருவாக்கி வைத்திருக்கிறார்கள்” என்று குறிப்பிட்டிருந்தார்.

தேசப் பற்றை வெளிப்படுத்துவதாகக் கூறிக்கொ ண்டு, நாட்டின் பொருளாதாரத் தூண்களாகத் திகழும் மலையகத் தமிழ் மக்களை இழிவுபடுத்தும் வகையில் அமைந்த இந்த வெறுப்புப் பேச்சுக்கு, தற்போது நாடு முழுவதும் பல்வேறு தரப்பினரும் தமது பலத்த கண்டனங் களைப் பதிவு செய்து வருகின்றனர். அமா எதிரிசிங்கவின் இந்தக் கூற்று, தனிப்பட்ட ஒருவரின் உணர்ச்சிவசப்பட்ட பேச்சு மாத்திரமல்ல. அது தலைமுறை தலைமுறையாக இலங்கையின் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் எதிர் கொண்டு வரும் கட்டமைக்கப்பட்ட இனவாதத்தினதும் சாதிய ஒடுக்குமுறையினதும் மீண்டு மொரு வெளிப்பாடாகும்.

இன்றளவும் பெரும்பான்மை சிங்கள சமூகத்தின் ஒரு பகுதியினரிடையே, மலையக மக்கள் இந்நாட்டின் பூர்வீக உரிமையாளர்கள் அல்லர்; அவர்கள் ‘கழிவறை சுத்தம் செய்யவும் தேயிலை கொழுந்து பறிக்கவும் கூலிகளாகக் கொண்டுவரப்பட்டவர்கள்’ என்ற தாழ்வு மனப்பான்மை ஆழமாகப் பதிந்துள்ளது. சமூக அந்தஸ்திலும் பொருளாதார நிலையிலும் இவர்களை எப்போதும் அடிமைகளாகவும் தாழ்ந்தவர்களாகவும் மட்டுமே பார்க்க வேண்டும் என்ற இன மேலாதிக்கச் சிந்தனையை இத்தகைய பதிவுகள் பிரதிபலிக்கின்றன.

அத்துடன் இது இலங்கையின் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் எதிர்கொண்டு வரும் கட்டமைக்கப்பட்ட இன ஒதுக்கலின் வெளிப்பாடாகும். 203 ஆண்டுகளுக்கும் மேலாக நாட்டின் பொருளாதாரத்தில் பிரதான தூணாக விளங்கும் ஒரு சமூகத்தை, சமூக அந்தஸ்திலும் பொரு ளாதார ரீதியிலும் தாழ்ந்தவர்களாகவே கருதும் ஒரு குறுகிய மனநிலையை இது பிரதிபலிக்கிறது. இருப்பினும், இத்தகைய இனவாதப் பேச்சுகளுக்கு எதிராக மலையக அரசியல் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டும் கருத்துகள் பெரும்பான்மை சமூகத்தின் இந்த அறியாமையைத் தோலுரித்துக் காட்டு கின்றன.

இந்த விடயம் தொடர்பில் தமது கண்டனத்தை வெளிப்படுத்தி அமா எதிரிசிங்கவின் பதிவுக்கு எதிராகக் குரல் கொடுத்துள்ள முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், “சில நேரங்களில் மௌனம் என்பது சம்மதமாகிவிடும். இது அப்படிப்பட்ட ஒரு தருணம்” என்று கூறி தமது கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார். “தேயிலை கொழுந்து பறித்த கைகளை இழிவுபடுத்துவது எளிது. ஆனால் அந்தக் கைகள் இந்த நாட்டிற்கு செய்த பங்களிப்பை மறைப்பது அவ்வளவு எளிதல்ல. எங்கள் மக்கள் சொகுசான வாழ்க்கையைத் தேடி வந்தவர்கள் அல்ல. கடினமான மலைகளில், மிக மோசமான சூழ்நிலைகளுக்கு மத்தியில் தலைமுறை தலைமுறையாக உழைத்து, நாட்டின் தேயிலைத் தொழிலை வளர்த்தெடுத்தவர்கள்.

கழிவறையைச் சுத்தம் செய்வதிலோ, தேயிலை கொழுந்து பறிப்பதிலோ எந்த அவமானமும் இல்லை. அந்த வேலையைச் செய்யும் மனிதர்களைத் தாழ்ந்தவர்களாக நினைக்கும் அமா எதிரிசிங்க போன்றவர்களின் குறுகிய மனநிலையில்தான் அவமானம் இருக்கிறது” என்று ஜீவன் தொண்டமான் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், எங்கள் இடம் எதுவென்று யாரும் எங்களுக்குச் சொல்லித் தர வேண்டியதில்லை. இது எங்கள் நாடும் கூட, இங்கு பிறக்கிறோம், வாழ்கிறோம், வாக்களிக் கிறோம், நாட்டின் வளர்ச்சிக்கு ஒவ்வொரு நாளும் பங்களிக்கிறோம். எனவே, இந்த இனவாத மற்றும் சாதிய இழிவைச் சாதாரணமாகக் கடந்து செல்ல முடியாது என்றும், இது குறித்து பாராளுமன்றத்தில் குரல் எழுப்புவேன் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.



இதேவேளை குறித்த பேஸ்புக் பதிவுக்கு தமது கண்டனத்தை வெளியிட்டுள்ள பெருந்தோட்டத்துறை பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், “மண்ணை வளப் படுத்திய தியாகிகள்” என்று பெருந்தோட்ட மக்களை குறிப்பிட்டுள்ளார். “மலையக மக்கள் உண்மையில் தியாகிகள். 203 வருடங்களுக்கு முன்பு காடாக இருந்த அடர்ந்த பிரதேசங்களை அழித்து, நாட்டின் மண்ணை வளப்படுத்தி, அந்நிய செலாவணியைப் பெற்றுத் தந்தவர்களே இந்த மக்கள். மனசாட்சியும் மனிதநேயமும் உள்ள எவரும் இத்தகைய இழிவான விமர்சனங்களைச் செய்ய மாட்டார்கள்.

மலையக மக்களுக்கு ‘வீடு’ என்பது வெறும் செங்கல்லாலும் சீமெந்தாலும் கட்டப்படும் சாதாரண கட்டடம் அல்ல; அது அவர்களின் பல தசாப்தகாலக் கனவு, கௌரவம், சுயமரியாதை மற்றும் காணியுரிமை சார்ந்த அடையாளம். இத்தகைய வரலாற்றுப் பின்னணி கொண்ட மக்களை இழிவுபடுத்துவதை உடனடியாக நிறுத்த வேண்டும்” என்று அவர் வலியுறுத்தினார். இதேவேளை, அமா எதிரிசிங்கவின் பேஸ்புக் பதிவிற்குப் பதிலளிக்கும் வகையில் சமூக ஊடகங்களில் கொந்தளித்துள்ள இளைஞர்களும் சமூக ஆர்வலர்களும், இலங்கைத் தேயிலைச் சபை வெளியிட்ட கடந்த 10 ஆண்டுகளுக்கான உத்தியோகபூர்வ தரவுகளை முன்வைத்து தக்க பதிலடி கொடுத்து வருகின்றனர்.

இலங்கைத் தேயிலைச் சபை வெளியிட்ட தரவுகளின்படி,கடந்த10ஆண்டுகளில்மட்டும்பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இலங்கையின் பொருளாதாரத்திற்கு 13.65 பில்லியன் அமெரிக்க டொலர்களை (இலங்கை ரூபாவில் சுமார் 4.521 ட்ரில்லியன்) ஈட்டித் தந்துள்ளனர். அப்படியென்றால் கடந்த 203 ஆண்டுகளில் இவர்கள் ஈட்டிய வருமானம் எவ்வளவு? உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல், கொரோனா பெருந்தொற்று மற்றும் அதனைத் தொடர்ந்த பொருளாதார நெருக்கடிக் காலங்களில் நாட்டின் சுற்றுலாத்துறை முடங்கி, வருமானம் பூச்சியமாக மாறியது.

அப்போது அமா எதிரிசிங்க உள்ளிட்ட பெரும் பான்மையின மக்கள் வீடுகளுக்குள் பாதுகாப்பாக இருந்த போது, 2019 முதல் 2023 வரை மாத்திரம் 6.48 பில்லியன் டொலர் வருமானத்தைக் கொண்டுவந்து கொடுத்தவர்கள் இந்த மலையகத் தமிழர்களே. அவர்கள் தேயிலைக் கூடைகளோடு மழையிலும் குளிரிலும் சிந்திய வியர்வையில் கிடைத்த அந்நியச் செலாவணியைக் கொண்டுதான் நாடு கொரோனா தடுப்பூசிகளையும், பெட்ரோல், டீசல், எரிவாயு மற்றும் அத்தியாவசிய மருந்துகளையும் இறக்குமதி செய்தது. நாட்டின் பொருளாதாரத்திற்கு இத்தனை பில்லியன் டொலர்களை ஈட்டித் தரும் இந்த மக்களின் வாழ்வியல் இன்றும் துயரம் நிறைந்ததாகவே உள்ளது.

கடும் மழையிலும் பனியிலும் 12 மணிநேரத்திற்கு மேலாக உழைக்கின்றனர். முன்னைய காலத்தில் அட்டைக்கடிக்கு மட்டுமே ஆளான இவர்கள், இன்று அட்டைக் கடியுடன் குளவிக் கொட்டு, நச்சுப் பாம்புகளின் தீண்டல் மற்றும் சிறுத்தைகளின் நடமாட்டம் என உயிரைப் பணயம் வைத்தே தேயிலை பறிக்கின்றனர். இயற்கைச் சீற்றங்களான மண்சரிவு மற்றும் வெள்ளப் பெருக்குகளுக்கு மத்தியில் இன்றும் குறுகிய ‘லயன் அறைகளிலேயே’ வசித்து வருகின்றனர்.

இவர்களின் பிள்ளைகளுக்கான தரமான பாடசாலைக் கட்டமைப்போ அல்லது முறையான மருத்துவ வசதிகளோ இன்றும் முழுமையாகக் கிடைக்கப் பெறவில்லை. இத்தனை சவால்களுக்கு மத்தியிலும், அன்று தேயிலை கொழுந்து பறித்தவர்களின் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் இன்று தங்களின் சுயமுயற்சியினால் மருத்துவர்களாக, சட்டத்தரணிகளாக, ஆசிரியர்களாக, பொறியியலாளர்களாக, தொழில்முனைவோராக, நாடாளு மன்ற உறுப்பினர்களாக நாட்டின் பல்வேறு துறைகளிலும் சாதனை படைத்து வருகின்றனர்.

இவ்வாறான பின்னணியில் சமூக ஊடகங்களில் எழுந்துள்ள எதிர்ப்பலைகளில் மற்றொரு முக்கிய கோரிக் கையும் முன்வைக்கப்பட்டுள்ளது. இலங்கையின் சட்டம் அனைத்துச் சமூகங்களுக்கும் சமமானது என்றால், அரசாங்கம் மலையக மக்களைச் சமமாக மதிக்குமானால், இனவாதத்தையும் வெறுப்புப் பேச்சையும் பரப்பிய இந்த அமா எதிரிசிங்க உடனடியாகக் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்ற குரல் வலுத்துவருகிறது.

அத்துடன், மலையக மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்திற்குச் சென்று சலுகைகளை அனுபவிக்கும் தமிழ் மக்கள் பிரதிநிதிகள், வெறும் அறிக்கைகளுடன் நின்றுவிடாமல், இந்த இனவாதப் பெண்ணைச் சட்டத்தின் முன் நிறுத்தத் துணிச்சலுடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தமிழ் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். எனவே, ஒரு நாட்டின் குடிமக்கள் அனைவரும் சமமாக நடத்தப்பட வேண்டும் என்பதே ஜனநாயகத்தின் அடிப்படை விதியாகும். நாட்டின் பொரு ளாதாரத்திற்கு உயிரைக் கொடுத்து உழைக்கும் ஒரு சமூகத்தை, “கழிவறை சுத்தம் செய்ய வந்தவர்கள்” என்று சிறுமைப்படுத்துவது அமா எதிரிசிங்க போன்றவர்களின் அறியாமையையும் இனவாத வக்கிரத்தையுமே காட்டுகிறது.

மலையக தமிழ் மக்களின் உழைப்பும் தியாகமும் இன்றி இலங்கையின் வரலாறு இல்லை. இவர்களின் கண் ணியத்தைச் சீண்டிப் பார்க்கும் இத்தகைய இனவாதப் போக்குகள் சட்டப்பூர்வமாகத் தண்டிக்கப்படுவதோடு, இவர் களுக்கான காணியுரிமை, கௌரவமான வீட்டுத் திட்டம் மற்றும் சம உரிமைகள் வழங்கப்படுவதே இந்நாட்டின் உண் மையான நல்லிணக்கத்திற்கு வழிவகுக்கும்.

• • •

## ஐக்கிய அரபு ... தொடர்ச்சி...

jairah) எண்ணெய்க் குழாய் வழியாகக் கொண்டு செல்லப்படுகிறது; ஹார்முஸ் நீரிணையைத் (Strait of Hormuz) தவிர்த்துச் செல்லும் ஐக்கிய அரபு அமீரகத்தின் ஒரே ஏற்றுமதிப் பாதை இதுவாகும். இதேபோன்று, ஹார்முஸ் நீரிணையைத் தவிர்த்துச் செல்லும் சவுதி அரேபியாவின் ‘கிழக்கு-மேற்கு’ எண்ணெய்க் குழாய் மீது மூன்று வாரங்களுக்கு முன்பு தாக்குதல் நடத்தப்பட்டது.

ஐக்கிய அரபு அமீரக அதிபருக்கும் இஸ்ரேலியப் பிரதமருக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பிற்குப் பதிலடியாக, ஈரான் இந்த வளாகத்தின் மீது தாக்குதல் நடத்தியிருக்கலாம் என்று பல தரப்புகள் தெரிவிக்கின்றன.




# தியாக தீபம் லெப்டினன்ட் கேணல் திலீபன்: ஐந்து கோரிக்கைகள், சுயநிர்ணய உரிமை மற்றும் தமிழீழம்

பாகம்2

இருப்பினும், காலனித்துவம் தொடர்பான சட்டப் பகுப்பாய்விற்குத் துல்லியம் தேவைப்படுகிறது, ஏனெனில் மற்றொரு இன சமூகத்தைச் சேர்ந்த குடிமக்களின் இடப்பெயர்ச்சி அல்லது குடியேற்றம், வேறு எந்தக் காரணமும் இன்றி, சர்வதேசச் சட்ட மீறலாக ஆகிவிடாது. ஒரு குறிப்பிட்ட மக்களின் அரசியல் அல்லது பிராந்திய நிலையைப் பாதிக்கும் நோக்கில் வடிவமைக்கப்பட்ட, பாகுபாடு நிறைந்த நில ஒதுக்கீடு, உடைமைகளைப் பறித்தல், இடம்பெயர்தல், நிர்வாக எல்லைகளை மாற்றுதல் அல்லது மக்கள்தொகைப் பொறியியல் போன்ற அரசின் திட்டமிட்ட கொள்கைகள் குறித்த குற்றச்சாட்டு எழும்போது, இவ்விவகாரச் சிக்கல் சட்டரீதியாக வேறுபடுகிறது. அத்தகைய சூழ்நிலைகளில், சமத்துவம், பாகுபாடின்மை, சொத்துரிமை, பண்பாட்டுப் பாதுகாப்பு மற்றும் அரசியல் பங்கேற்பு ஆகிய கேள்வி கள் நேரடியாகப் பொருத்தமானவையாகின்றன. அதே நேரத்தில், சுயநிர்ணய உரிமையைத் திறம்படச் செயல்படுத்துவதற்கான பரந்த விளைவுகளும் ஆய்வு செய்யப்பட வேண்டும்.



இதனால்தான் நிலத்தைச் சுயநிர்ணய உரிமையிலிருந்து பிரிக்க முடியாது. ஒரு தாயகத்தின் மக்கள் தொகை, பிராந்திய மற்றும் பண்பாட்டுத் தன்மையை அடிப்படையாக மாற்றக்கூடிய முடிவுகள், அதன் அர்த்தமுள்ள பங்கேற்பு இல்லாமலேயே எடுக்கப்பட முடியுமானால், அந்த மக்கள் அத்தாபரத்தின் மீது அர்த்தமுள்ள அதிகாரத்தைக் கோர முடியாது. எனவே, தியாகா தீபம் லெப்டினன்ட் கேணல் திலீபனின் இரண்டாவது கோரிக்கை, தனிப்பட்ட நிலப் பகுதிகளை விடவும் கணிசமாகப் பெரிய விஷயமாக இருந்தது; இது, தமிழ் தேசியம் மற்றும் அர்த்தமுள்ள பிராந்திய சுய-ஆட்சியின் எந்தவொரு செயல்பாடும் அவசியமாகச் சார்ந்திருக்கும் பிராந்திய அடித்தளத்தைப் பாதுகாப்பது தொடர்பானது.

இந்தக் கேள்வியின் தொடர்ச்சியான உணர்திறன் வெறும் வரலாற்று ரீதியானது மட்டுமல்ல. இலங்கையைப் பற்றிய தனது 2025 ஆம் ஆண்டு இறுதி அவதானிப்புகளில், ஐ.நா.வின் கட்டாயக் காணாமல் போதல்கள் மீதான குழு, தமிழ் மற்றும் முஸ்லிம் பகுதிகளில் நில அபகரிப்புகள் மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட பிராந்தியங்களில் இராணுவமயமாக்கல் குறித்து கவலை தெரிவித்ததோடு, பாதுகாப்புத் துறை சீர்திருத்தத்தின் ஒரு பகுதியாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவ இருப்பைக் குறைக்கவும் பரிந்துரைத்தது. இந்தக் கண்டுபிடிப்புகள் காலனித்துவம் தொடர்பான ஒவ்வொரு பரந்த அரசியல் குற்றச்சாட்டையும் தாங்களாகவே நிரூபிக்கவில்லை, ஆனால் வடகிழக்கில் நிலம், பிராந்தியம் மற்றும் இராணுவமயமாக்கல் தொடர்பான கேள்விகள் 1987 ஆம் ஆண்டுடன் எளிமையாக அடக்கிவிடக்கூடிய பிரச்சினைகளாக இல்லாமல், ஏன் சமகால சர்வதேச அக்கறைக்குரிய விடயங்களாக நீடிக்கின்றன என்பதை அவை விளக்குகின்றன.

மூன்றாவது கோரிக்கை: ஒரு இடைக்கால அரசாங்கம் அமைக்கப்படும் வரை மறுவாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்தல் ஒரு இடைக்கால அரசாங்கம் அமைக்கப்படும் வரை அத்தகைய அனைத்து மறுவாழ்வும் நிறுத்தப்பட வேண்டும் என்று மூன்றாவது கோரிக்கை கூறியது. இந்தக் கோரிக்கை குறிப்பாக முக்கியமானது, ஏனெனில் இது அரசின் தலையீட்டிலிருந்து பாதுகாப்பையும் தாண்டி, ஆட்சி செய்வதற்கான அதிகாரம் யாரிடம் உள்ளது என்ற கேள்வியை நேரடியாக எழுப்புகிறது. மறுவாழ்வு மற்றும் மீள்கட்டமைப்பு நடவடிக்கைகள் தொழில்நுட்ப அல்லது மனிதாபிமானச் செயல்பாடுகளாகத் தோன்றலாம்; ஆனால், மீள்கட்டமைப்பு தொடர்பான முடிவுகள் தவிர்க்க முடியாமல்

செல்வி **ரேணுகா இன்பக்குமார்**
வழக்கறிஞர், அவுஸ்திரேலியா.
பேச்சாளர், தமிழ் ஏதிலிகள் கழகம்.

அரசியல் அதிகாரத்தோடு பிணைந்துள்ளன. ஏனெனில், நிலப் பயன்பாடு, மக்கள் மீள்குடியேற்றம், கட்டியெழுப்பப்பட வேண்டிய உட்கட்டமைப்பு, பொது வளங்களின் பகிர்வு, மறுசீரமைக்கப்பட வேண்டிய நிறுவனங்கள் மற்றும் ஒரு பிரதேசத்தின் அரசியல் மற்றும் பொருளாதார எதிர்காலம் ஆகியவை எத்தகைய வடிவத்தைப் பெறும் என்பதை இம்முடிவுகளே தீர்மானிக்கின்றன.

எனவே, இடைக்கால அரசாங்கத்திற்கான கோரிக்கையானது, அர்த்தமுள்ள அரசியல் அதிகாரம் இல்லாத நிறுவனங்களால் தமிழர்களின் தாயகம் நிர்வகிக்கப்படக் கூடாது என்பதற்கான ஒரு வலியுறுத்தலாக அமைந்தது. தமிழர்களின் பகுதிகள் மீள்கட்டமைப்பு மற்றும் எதிர்கால மேம்பாடு தொடர்பான முடிவுகளை எடுப்பதற்கு, தமிழர்களே நேரடியாக அரசாங்க அதிகாரத்தைச் செயல்படுத்தக்கூடிய ஒரு நிறுவனக் கட்டமைப்பு தேவை என்பதை அது வலியுறுத்தியது. அந்த வகையில், மூன்றாவது கோரிக்கையானது 'உள்நிலை சுயநிர்ணய உரிமை' (internal self-determination) எனும் தற்கால சர்வதேசச் சட்டக் கோட்பாட்டிற்கு மிக நெருக்கமாக அமைகிறது; ஏனெனில், இது தமிழர்களின் அடையாளத்தைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல், தமிழர்களின் கூட்டு வாழ்க்கையை நிர்வகிக்கும் அரசியல் நிறுவனங்களில் அர்த்தமுள்ள பங்கேற்பையும் அவற்றின் மீதான கட்டுப்பாட்டையும் கொண்டிருப்பதைப் பற்றியதாகவும் இருந்தது.

இங்குதான் 'குடிமை மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை' (ICCPR) மற்றும் 'பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை' (ICESCR) ஆகிய இரண்டிலும் உள்ள பொதுவான முதல் விதி (Article 1) முக்கியத்துவம் பெறுகிறது. அனைத்து மக்களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை இவ்விரு உடன்படிக்கைகளும் அங்கீகரிக்கின்றன; இந்த உரிமையின் மூலம் மக்கள் தங்கள் அரசியல் நிலையைத் தாங்களே சுதந்திரமாகத் தீர்மானிக்கவும், தங்கள் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார வளர்ச்சியைச் சுதந்திரமாக முன்னெடுக்கவும் முடிகிறது. சுயநிர்ணய உரிமையானது மக்களின் பறிக்க முடியாத உரிமை என்றும், தனிநபர் மனித உரிமைகளைத் திறம்பட உறுதி செய்வதற்கும் கடைப்பிடிப்பதற்கும் அது ஒரு இன்றியமையாத நிபந்தனை என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழு விவரித்துள்ளது.

எனவே, பொதுவான 'பிரிவு 1'-இன் (Common Article 1) வாசகங்கள் தமிழ் தேசியப் பிரச்சினைக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்தவை; ஏனெனில், அது வெறும் கலந்தாலோசனையை (consultation) மட்டுமே உறுதிப்படுத்தவில்லை; மாறாக, ஒரு மக்கள் தங்கள் அரசியல் நிலையைத் தாங்களே சுதந்திரமாகத் தீர்மானிப்பதையும், தங்கள் வளர்ச்சியைச் சுதந்திரமாக முன்னெடுப்பதையும் அது குறிப்பிடுகிறது. மற்றொரு அரசியல் அதிகார அமைப்பால் உருவாக்கப்பட்ட நிறுவனங்களின் மூலம் ஆளப்படுவதற்கும், மக்கள் தங்கள் சொந்த விவகாரங்கள் மீது அர்த்தமுள்ள கட்டுப்பாட்டைச் செலுத்தக்கூடிய உண்மையான அரசியல் கட்டமைப்புகளைக் கொண்டிருப்பதற்கும் இடையே இது ஒரு முக்கிய வேறுபாட்டை உருவாக்குகிறது.

இதன் விளைவாக, ஈழத் தமிழர்களுக்கு உண்மையான 'உள்நாட்டு சுயநிர்ணய உரிமை' (internal self-determination) எத்தகையதைக் கோருகிறது என்பதை ஆராய மூன்றாவது கோரிக்கை நம்மைத் தூண்டுகிறது. நிலம், பொருளாதார மேம்பாடு, காவல் துறை, பாதுகாப்பு, வளங்கள் மற்றும் தமிழ் நிறுவனங்களின் அரசியலமைப்பு அதிகாரங்கள் தொடர்பான முடிவுகள் இறுதியில் மத்திய அதிகாரத்தின் கட்டுப்பாட்டிலேயே இருக்குமானால், மாகாண அல்லது உள்ளூர் நிர்வாக அமைப்புகள் இருப்பதாலேயே சுயநிர்ணய உரிமை குறித்த அடிப்படைப் பிரச்சினை தீர்ந்துவிடாது. அதிகாரப் பகிர்வு அல்லது உள்ளூர் நிர்வாகம் என்ற பெயரிலான நிறுவனங்கள் இருப்பதைக் கொண்டு மட்டும் உண்மையான அரசியல் சுயாட்சியை மதிப்பிட முடியாது; மாறாக, உண்மையில் செயல்படுத்தப்படும் அதிகாரங்களின் தன்மையைக் கொண்டே அது மதிப்பிடப்பட வேண்டும்.

நான்காவது கோரிக்கை: வட-கிழக்கில் புதிய காவல் நிலையங்கள் மற்றும் முகாம்கள் அமைக்கப்படக்கூடாது. வட-கிழக்கு மாகாணத்தில் புதிய காவல் நிலையங்களையும் முகாம்களையும் அமைப்பதை இலங்கை அரசாங்கம் நிறுத்த வேண்டும் என்பதே நான்காவது கோரிக்கையாக இருந்தது. இந்தக் கோரிக்கை அரசியல் அதிகாரத்தின் மிக அடிப்படையான அம்சங்களில் ஒன்றான 'கட்டாயப்படுத்தும் அதிகாரத்தைச் (coercive power) செயல்படுத்தக்கூடிய நிறுவனங்களின் மீதான கட்டுப்பாடு' தொடர்பானது. காவல் நிலையங்களும் இராணுவ முகாம்களும் அரசியல் ரீதியாக நடுநிலையான உள்கட்டமைப்புகள் அல்ல; ஏனெனில் அவை அரசின் நிறுவன ரீதியான இருப்பைப் பிரதிபலிக்கின்றன; அத்துடன் கண்காணிப்பு, கைது, தடுத்து வைத்தல் மற்றும் தகுந்த சூழல்களில் வன்முறையைப் பயன்படுத்துதல் போன்ற அதிகாரங்களையும் அவை கொண்டுள்ளன.



பொதுப் பாதுகாப்பு மற்றும் தேசியப் பாதுகாப்பு தொடர்பான நியாயமான பொறுப்புகள் ஒவ்வொரு அரசுக்கும் உண்டு; ஒரு அரசு தனது எல்லைக்குள் காவல் நிலையங்களை அமைப்பதையோ அல்லது ஆயுதப் படைகளைப் பராமரிப்பதையோ சர்வதேசச் சட்டம் தடை செய்வதில்லை. ஆனால், முக்கியமான கேள்விகள் எழுகின்றன: அந்த அதிகாரங்கள் சட்டபூர்வமாகவும்,, விகிதாச்சாரப்படியும், பாகுபாடின்றியும் செயல்படுத்தப்படுகின்றனவா? குடிமக்கள் சார்ந்த பொறுப்புக்கூறல் (civilian accountability) வழிமுறைகள் உள்ளனவா? மற்றும் ஒரு பிரதேசத்தில் செயல்படும் பாதுகாப்பு கட்டமைப்புகள், அதனால் பாதிக்கப்படும் மக்களின் மனித உரிமைகளையும் அரசியல் பங்கேற்பையும் மதிக்கின்றனவா?

இருப்பினும், சுயநிர்ணய உரிமையை வலியுறுத்

தொடர்ச்சி: பக்கம் 13




அம்பாறை மாவட்டத்தின் கல்முனையில் வறுமையில் வாடிய தனது வீட்டை விட்டு, கடந்த செப்டம்பர் மாதம் இருபத்தைந்து வயதான சிவராசா அனோஜன் புறப்பட்டார்; சவூதி அரேபியாவில் தனது வாழ்வை வளமாக்கிக்கொள்ளலாம் என்ற பலத்த கனவுகளுடன் அவர் அங்கு சென்றார்.

துரதிர்ஷ்டவசமாக, சவூதியின் தூசு படிந்த பாலைவனங்களில் மழை அரிதாகவே பெய்யும் என்றோ, அல்லது அரேபியாவின் சுட்டெரிக்கும் சமவெளிகளில் எழும் தூசியைப் போலவே கானல் நீரும் (mirage) அங்கு சாதாரணமாகத் தோன்றும் என்றோ அவரிடம் யாரும் சொல்லவில்லை.



அதற்குப் பதிலாக, மணலுக்கு அடியில் புதைந்து கிடக்கும் எண்ணெய் மட்டுமே அங்குள்ள ஒரே நிஜம் என்பதையும், பொது இடத்தில் தனது கழுத்தின் மீது இரக்கமின்றி விழும் மரணதண்டனை நிறைவேற்றுபவரின் கோடாரிதான் தவிர்க்க முடியாத கொடூரமான உண்மை என்பதையும் கண்டு அவர் அதிர்ச்சியும் பீதியும் அடைந்தார்.

சவூதி ராஜ்ஜியத்தில் மத நிந்தனை என்பது மிகக் கொடூரமான குற்றம் என்றும், அதற்கான தண்டனை தலையைத் துண்டிப்பதன் மூலம் வழங்கப்படும் மரணதண்டனை என்றும் அனோஜனிடம் யாரும் சொல்லவில்லை என்றே தோன்றுகிறது.

பதினெட்டாம் நூற்றாண்டில் முஹம்மது இப்னு அப்துல் வஹாப் என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட வஹாபிசம் (Wahhabism), இஸ்லாமிய வேதங்களின் நேரடி மற்றும் சொல்லப்பொருள் சார்ந்த விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. இது முழுமையான ஏகத்துவத்தை வலியுறுத்தியதுடன், ஆரம்பகால இஸ்லாமிய நடைமுறைகளிலிருந்து மாறுபட்டதாகக் கருதப்படும் எந்தவொரு புதிய மாற்றங்களையும் அல்லது விலகல்களை யும் கடுமையாகத் தடை செய்தது.

இது சுன்னி பிரிவுக்குள் உருவான ஒரு தீவிர பழமைவாத, மரபுசார் சீர்திருத்த இயக்கமாகும். நாடோடி பெடோயின் (Bedouin) இன மக்களைத் தன் வசப்படுத்தும் அளவுக்கு இது பெரும் செல்வாக்கு செலுத்தியது; சவூதி அரேபியாவை நிறுவிய அப்துல் அஜீஸ் அல் சவூத், இந்த இயக்கத்தையே தனது அதிகாரத்தின் அடித்தளமாகவும், பரந்து விரிந்த பாலைவனப் பேரரசின் அடிப்படை அஸ்திவாரமாகவும் பயன்படுத்திக்கொண்டார்.

இன்றும் கூட, சவூதி அரச குடும்பம் நீதித்துறையில் பெரும் செல்வாக்கைச் செலுத்தவும், ஷரியா சட்டத்தின் கடுமையான வடிவத்தை அமுல்படுத்தவும் இந்த சித்தாந்தத்தையே பெரிதும் நம்பியுள்ளது. இதன் விளைவாக, மத நிந்தனை, மத மாற்றம் (இஸ்லாத்திலிருந்து விலகுதல்) அல்லது மத அவமதிப்பு எனக்கருதப்படும் எதையும் அரசு முழுமையான சகிப்புத்தன்மையின்மையுடனேயே அணுகுகிறது. இதற்கான தண்டனை - எப்போதும் தவறாமல் நிறைவேற்றப்படுவது - மிகக் கடுமையானது: தலையைத் துண்டிப்பதன் மூலம் மரணதண்டனை.

அரசியல் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு வஹாபிசத்தை பெரிதும் நம்பியிருக்கும் சவூதி மன்னரால் வேறுவிதமாகச் செயல்பட முடியாது. தனது ஆளுகைக்குட்பட்ட நிலப்பரப்பின் மன்னராகத் தொடர்ந்து நீடிக்க, அவர் தனது மதத்தின் கோட்பாடுகளைப் பின்பற்றியே ஆக வேண்டும். தனது மதக் கடமையை நிறைவேற்றத் தவறினால், அவன் தனது கிரீடம், செங்கோல் மற்றும் அரியணையை மட்டுமல்ல, தனது தலையையே இழக்கும் அபாயத்தையும் எதிர்கொள்ள நேரிடும்.

சவூதி பாலைவன மணலில் தனது கனவுகளின் சொர்க்கத்தைத் தேடிச் சென்ற அனோஜன், அங்கு ஒரு அரேபியப் பயங்கரமான கனவைச் சந்திக்க நேரிடும் என்பதை அறியாமலேயே அந்த ஆபத்தான சூழலை நோக்கி மகிழ்ச்சியுடன் சென்றான்.

செய்தி அறிக்கைகளின்படி, இலங்கையின் சமூக ஊடகத் தளங்களில் மதவெறி சார்ந்த வெறுப்புணர்வு காரணமாக பதற்றம் அதிகரித்தபோதுதான், 26 வயதான அந்த இளைஞனின் கொடூரமான துயர நிலை தொடங்கியது. ஜூலை மாதத்தில் நடைபெறும் முருகப் பெருமானின் திருவிழாவில் கலந்துகொள்வதற்காக, யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமம் வரை நூற்றுக் கணக்கான மைல்கள் நடந்தே செல்லும் பக்திமிக்க யாத்ரீகர்களின் வருடாந்திர 'பாதயாத்திரை'யின் போது ஏற்பட்ட ஒரு சம்பவத்திலிருந்தே இது உருவானது.

ஆனால், இந்த ஆண்டு ஜூன் மாதம் கதிர்காமம் நோக்கிய அந்த நீண்ட, கடினமான நடைப்பயணத்தை மேற்கொண்டவர்கள் பக்திமிக்க மனிதர்கள் மட்டுமல்ல. 'சுப்பிரமணியம்' என்று பெயரிடப்பட்ட ஒரு நாயும் அவர்களுடன் சென்றது; இது முருகப்பெருமானின் ஆயிரக்கணக்கான பெயர்களில் ஒன்றாகும். முருகப்பெருமான் நேரில் எழுந்தருளியிருப்பதாக நம்பப்படும் அந்தப் பழமையான புனிதத் தலத்திற்கான நீண்ட, சிரமமான பயணத்தில் அந்த நாய் ஒரு பரிச்சயமான தோழனாக மாறியிருந்தது.

கல்முனையைச் சேர்ந்த ஒருவர் தங்கள் நாய் நண்பனை உதைத்துத் துன்புறுத்தியதைக் கண்டபோதுதான், அந்த நடைப்பயண யாத்ரீகர்களுக்குப் பெரும் சிக்கல் ஏற்பட்டது. நிலைமையை மேலும் மோசமாக்கும் வகையில், அந்தச் சம்பவம் வீடியோவாகப் பதிவு செய்யப்பட்டு சமூக ஊடகங்களில் பகிரப்பட்டது; இது மதவெறி சார்ந்த வெறுப்புப் பேச்சுகளின் வன்முறை மோதலுக்குத் தூண்டுகோலாக அமைந்தது.

சமூக ஊடகங்களில் நடந்த இந்த விஷமத்தனமான மோதலின் விளைவாக, கல்முனையிலிருந்து இரண்டாயிரத்து ஐந்நூறு மைல்கள் தொலைவில் உள்ள ரியாத்தின் ஒரு வெப்பம் மிகுந்த சிறை அறையில், 26 வயதான சிவராசா அனோஜன் 'சாலிடர்' (Solitaire) சீட்டு விளையாட்டை விளையாடிக்கொண்டிருக்கிறான்; அதேவேளையில், மரண தண்டனை நிறைவேற்றுபவனின் கோடாரியைச் சந்திக்க வேண்டிய அந்தப் பயங்கரமான தருணத்தை நினைத்து அவன் அஞ்சுகிறான்.

ஆனால், ரியாத்தின் பொதுச் சதுக்கம் ஒன்றில் அவனது தலை வெட்டப்படும் நிலை ஏற்பட்டிருக்க வேண்டிய அவசியமே இருந்திருக்காது. அனோஜனின் அரேபியப் பயணத்தின் போது அவனுக்கு நேர்ந்த துயரமான விதி உண்மையில் தொடங்குவது இந்தக் கட்டத்தில்தான்.

இணையத்தில் நடந்த இந்த வெறுக்கத்தக்க கருத்துப் பரிமாற்றங்கள் சவூதி அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. சுருக்கமாகச் சொன்னால், சவூதி காவல்துறையினர் அனோஜனைக் கைது செய்து, ஜூலை 15 அன்று மூன்று பேர் கொண்ட குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னிறுத்தினர். அவர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதாகத் தீர்ப்பளிக்கப்பட்டது.

அல்-அஹ்சா குற்றவியல் நீதிமன்றம் அவருக்கு ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனையும், 30 லட்சம் சவூதி ரியால் அபராதமும் விதித்தது; அத்துடன் அவரது மின்னணு சாதனம் பறிமுதல் செய்யப்பட்டதுடன், தொடர்புடைய சமூக ஊடகக் கணக்கும் முடக்கப்பட்டது.

அந்த விவகாரம் அங்கேயே முடிவுக்குக் கொண்டுவரப் பட்டிருந்தால், சவூதி அரேபியாவின் இஸ்லாமிய குடிமக்களால் மிகுந்த மரியாதையுடன் போற்றப்படும் மத

தமிழில்: **ஆர்தீகன்**

நம்பிக்கையை அவமதித்த குற்றத்திற்காக விதிக்கப்பட்ட ஐந்து ஆண்டு சிறைத்தண்டனை – ஒப்பீட்டளவில் குறைவான தண்டனையாகவே கருதப்பட்டது – ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால், ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு அனோஜன் ஒரு சுதந்திர மனிதனாகச் சிறை வாயிலைக் கடந்து வெளியே வந்திருப்பார்; அப்போது அவரது முகத்தில் இளமையின் முழு மலர்ச்சியும், சுதந்திரத்தின் இனிய நறுமணமும் நிறைந்திருக்கும்.




ஆனால் துரதிர்ஷ்டவசமாக, முப்பது வயதில் அனோஜனுக்கு அத்தகையதொரு மகிழ்ச்சியான எதிர்காலம் வாய்க்காமல் போய்விட்டது. அதற்குப் பதிலாக, வஹாபிசக் கொள்கையின் அடிப்படையில் இயங்கும் சவூதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஒரு தவறான மேல்முறையீடு – ஷரியா சட்ட மீறல்களைச் சற்றும் பொறுத்துக்கொள்ளாத மற்றும் மத நிந்தனை, மதம் மாறுதல் (apostasy) மற்றும் மத அவமதிப்பு ஆகியவற்றிற்குத் தலையைத் துண்டிக்கும் மரண தண்டனையை வழக்கமாக விதிக்கும் நீதிமன்றம் அது – 'மத நம்பிக்கையற்றவர்' (infidel) எனக் கருதப்படும் சிவராச அனோஜனை, சவூதி சிறையில் மரண தண்டனையை எதிர்நோக்கியிருக்கும் ஒரு கைதியாக மாற்றிவிட்டது. இப்போது அவர், மரணதண்டனை நிறைவேற்றுபவரின் கூர்மையான கோடாரியைச் சந்திக்கவிருக்கும் நாளை, அதிகரித்து வரும் அச்சத்துடனும் உடல் நடுங்க வைக்கும் பயத்துடனும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்.

மன்னிக்க அதிகாரம் கொண்ட சவூதி மன்னரிடம் கருணை கோரும் மனுக்கள் மிக முன்னதாகவே – அதாவது அல்-அஹ்சா குற்றவியல் நீதிமன்றம் மரண தண்டனைத் தீர்ப்பை வழங்குவதற்கு முன்பே – சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும்; தலையைத் துண்டிக்கும் மரண தண்டனை அறிவிக்கப்பட்ட பிறகு அல்ல. அந்த மரண தண்டனைத் தீர்ப்பினால் சவூதி மன்னரே கூட கட்டுப்பட்டிருக்கலாம்; மேலும், இவ்வளவு தாமதமான கட்டத்தில் அல்-அஹ்சா நீதிமன்றத்தின் தீர்ப்பை ரத்து செய்வது, இறைவனின் தெய்வீக குர்ஆன் சட்டத்தின் பார்வையில் மன்னராட்சி சமமான நிலையில் செயல்படுகிறது என்ற பிம்பத்தைப் பாதிக்கக்கூடும்.

காலம் கடந்துவிட்ட நிலையில், இவ்வளவு தாமதமாகச் சவூதி மன்னரிடம் கருணை கோருவது என்பது, '22-வது திருத்தச் சட்டத்தை' (22A) இயற்றுவதற்கு எதிராக நாடாளுமன்றத்திற்கு அருகில் வியாழக்கிழமையன்று பெருந்திரளான எதிர்ப்பைத் திரட்டுவது எவ்வளவு பயனற்றதோ, அவ்வளவு பயனற்றதாகவே இருக்கும்.

ஷரியா சட்டத்தின் கீழ் மேல்முறையீட்டு நீதிமன்றமோ அல்லது உச்ச நீதிமன்றமோ ஒரு தீர்ப்பை வழங்கிய பிறகு, ஒரு தூதரக ரீதியான நல்லெண்ண நடவடிக்கையாகச் சவூதி மன்னர் வழங்கும் அரச மன்னிப்பு என்பது சிக்கலான அரசியல் மற்றும் மத ரீதியான தாக்கங்களைக் கொண்டது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இருப்பினும், சவூதி மன்னர் தனது கருணைமிக்க இதயத்தில் மன்னிப்பு எனும் தெய்வீகப் பண்பைக்

தொடர்ச்சி: பக்கம் 13




A.M.L லம்பேட்

ஆப்பிரிக்கக் கண்டத்தின் மிக முக்கியமான அரசியல் மற்றும் புவிசார் அரசியல் நாடுகளில் ஒன்றான எத்தியோப்பியா (Ethiopia), மீண்டும் தீவிரமான அரசியல் மற்றும் பாதுகாப்பு நெருக்கடியை எதிர்கொண்டு வருகிறது. குறிப்பாக வடக்கு எத்தியோப்பியாவின் Tigray பிராந்தியத்தில் (Tigray Region) அதிகரித்து வரும் ஆயுத மோதல், 2020–2022 காலகட்டத்தில் நடைபெற்ற உள்நாட்டுப் போரின் (Civil War) அடிப்படை அரசியல் பிரச்சினைகள் இன்னும் முழுமையாகத் தீர்க்கப்படவில்லை என்பதை வெளிப்படுத்துகிறது. இந்த நிலைமை எத்தியோப்பியாவின் உள்நாட்டு அரசியலை மட்டுமல்லாமல், முழு Horn of Africa பிராந்தியத்தின் (Regional Security) பாதுகாப்பையும் பாதிக்கும் திறன் கொண்டதாக உள்ளது.

எத்தியோப்பியாவின்தற்போதையநெருக்கடியைப் புரிந்துகொள்ள அதன் நவீன அரசியல் வரலாற்றை புரிந்துகொள்வது அவசியமாகும். 1991ஆம் ஆண்டு முதல் Tigray People's Liberation Front (TPLF) தலைமையிலான Ethiopian People's Revolutionary Democratic Front (EPRDF) கூட்டணி நாட்டின் அரசியலில் முக்கியமான அதிகாரத்தைப் பெற்றிருந்தது. 2018ஆம் ஆண்டு Abiy Ahmed பிரதமராக பதவியேற்ற பின்னர் அரசியல் மறுசீரமைப்பு (Political Reform), பொருளாதார மாற்றம் மற்றும் Eritrea உடனான உறவு மேம்பாடு போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் மத்திய அரசுக்கும் Tigray பிராந்திய அரசியல் தலைமையுக்கும் இடையில் அதிகாரம், அரசியலமைப்பு (Constitutional Authority) மற்றும் தேர்தல் தொடர்பான கருத்து வேறுபாடுகள் அதிகரித்தன. இதன் விளைவாக 2020ஆம் ஆண்டு Tigray பகுதியில் ஆயுத மோதல் ஆரம்பமானது. Ethiopian Federal Government forces, Tigrayan forces மற்றும் பிற பிராந்திய ஆயுதப் படைகள் இந்தப் போரில் ஈடுபட்டன. Eritrea-வின் இராணுவப் பங்கேற்பும் சர்வதேச அளவில் முக்கியமான விவாதமாக மாறியது.

2022ஆம் ஆண்டு Pretoria Agreement மூலம் முக்கியமான போர் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன. இந்த ஒப்பந்தம் (Peace Agreement) ஒரு முக்கியமான அமைதிப் படியாக இருந்தாலும், Disarmament, Displacement, disputed territories, Transitional Justice மற்றும் அரசியல் அதிகாரப் பகிர்வு போன்ற பல பிரச்சினைகள் முழுமையாகத் தீர்க்கப்படவில்லை. இதனால் அமைதி செயல்முறை (Peace Process) மிகவும் பலவீனமான நிலையில் தொடர்ந்தது.

2026ஆம் ஆண்டில் Tigray பகுதியில் மீண்டும் பதற்றம் அதிகரித்திருப்பது இந்த பலவீனத்தை வெளிப்படுத்துகிறது. TPLF உட்பட சில எதிர்ப்பு சக்திகள் (Opposition Forces) மத்திய அரசுக்கு எதிராக அரசியல் மற்றும் இராணுவ அழுத்தத்தை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன. இதனுடன் Oromo Liberation Army (OLA) மற்றும் Amhara Fano போன்ற ஆயுத எதிர்ப்புக் குழுக்களும் எத்தியோப்பியாவின் பாதுகாப்பு நிலைமையை சிக்கலாக்குகின்றன. இருப்பினும், இந்த அமைப்புகளின் அரசியல் நோக்கங்கள் ஒன்றுக்கொன்று முழுமையாக ஒத்தவை அல்ல என்பதால், அவற்றின் நீண்டகால கூட்டணி (Political and Military Alliance) எவ்வாறு வளர்ச்சியடையும் என்பது தெளிவாக இல்லை.



தற்போதைய நிலைமை பொதுமக்களுக்கும் கடுமையான மனிதாபிமான விளைவுகளை ஏற்படுத்துகிறது. Tigray மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் மக்கள் இடம்பெயர்வு (Displacement), உணவு மற்றும் மருத்துவப் பொருட்களின் பற்றாக்குறை, போக்குவரத்து தடைகள் மற்றும் Humanitarian Access தொடர்பான பிரச்சினைகள் அதிகரிக்கும் அபாயம் உள்ளது. ஐக்கிய நாடுகள் சபையும் (United Nations) வடக்கு எத்தியோப்பியாவில் மோதல் மேலும் தீவிரமடைவதைத் தவிர்த்து, பொதுமக்களைப் பாதுகாக்கவும் மனிதாபிமான உதவிகளை அனுமதிக்கவும் அழைப்பு விடுத்துள்ளது.

இந்த நெருக்கடிக்கு மிக முக்கியமான Regional Security Dimension உள்ளது. Ethiopia–Eritrea உறவு ஏற்கனவே கடுமையான பதற்றத்தை எதிர்கொண்டுள்ளது. Red Sea-க்கான அணுகல், துறைமுகப் பயன்பாடு மற்றும் Ethiopia-வின் கடல்சார் மூலோபாய விருப்பங்கள் (Maritime Strategic Interests) Eritrea மற்றும் பிற அண்டை நாடுகளுடனான உறவுகளை மேலும் சிக்கலாக்குகின்றன. Ethiopia–Eritrea பதற்றம் அதிகரிப்பது Tigray மோதலுக்கு மட்டுமல்லாமல் முழு Horn of Africa பாதுகாப்பு அமைப்புக்கும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

மேலும் Sudan-இல் நடைபெறும் உள்நாட்டுப் போர், Somalia-வின் பாதுகாப்புச் சவால்கள், Red Sea பாதுகாப்பு மற்றும் Egypt–Ethiopia Nile நீர்வளப் பிரச்சினை ஆகியவை ஒன்றோடொன்று தொடர்புடையவை. குறிப்பாக Grand Ethiopian Renaissance Dam (GERD) தொடர்பான Ethiopia–Egypt பதற்றம், Nile Basin அரசியல் (Nile Basin Politics) மற்றும் பிராந்திய சக்தி சமநிலையை (Regional Balance of Power) தொடர்ந்து பாதித்து வருகிறது.

International Relations பார்வையில், Ethiopia-வின் தற்போதைய நெருக்கடி என்பது ஒரு சாதாரண உள்நாட்டு அரசியல் பிரச்சினை அல்ல. இது Ethnic Federalism, Centre–Periphery Power Competition, Security Dilemma, Regional Intervention, State Fragility மற்றும் Peacebuilding ஆகிய பல சர்வதேச உறவுக் கருத்துகளுடன் தொடர்புடையது.

எத்தியோப்பியாவில் மீண்டும் விரிவான உள்நாட்டுப் போர் உருவானால், அதன் விளைவுகள் நாட்டின் எல்லைகளுக்குள் மட்டுப்படுத்தப்படாது. அகதிகள் (Refugees), ஆயுதங்களின் எல்லைத் தாண்டிய இயக்கம் (Cross-Border Arms Movement), மனிதாபிமான நெருக்கடி (Humanitarian Crisis), வர்த்தகப் பாதைகள் மற்றும் Red Sea பாதுகாப்பு ஆகியவை பாதிக்கப்படலாம். எனவே African Union தலைமையிலான (AU-led) Mediation, Pretoria Agreement-ன் அமுலாக்கம், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நீடித்த அரசியல் உரையாடல் ஆகியவை Horn of Africa-வின் எதிர்கால நிலைத்தன்மைக்கு முக்கியமானவை.

எத்தியோப்பியாவின் தற்போதைய நெருக்கடி ஒரு முக்கியமான உண்மையை வெளிப்படுத்துகிறது: உள்நாட்டு அரசியல் சமரசம் பலவீனமடைந்தால், அதன் பாதுகாப்பு விளைவுகள் தேசிய எல்லைகளைத் தாண்டி முழு பிராந்தியத்தையும் பாதிக்கக்கூடும். ஆகவே Ethiopia-வின் அமைதி மற்றும் அரசியல் நிலைத்தன்மை என்பது Ethiopia-வின் உள்நாட்டு விவகாரம் மட்டுமல்ல; அது Horn of Africa மற்றும் Red Sea பிராந்தியத்தின் பரந்த Regional Security Architecture-இன் முக்கிய அங்கமாகும்.

• • •

## குமரப்பா, புலேந்திரன்... தொடர்ச்சி...

ஈழப்போர் என பெயர் சூட்டினர். அதற்கு முன்னம் நடந்தவைகள் கெரில்லா தாக்குதல் (கரந்தடித்தாக்குதல்கள்) என்பதே உண்மை.

இந்திய இராணுவம் 1965ல் பாகிஸ்தானுடன் நடந்த போர் 22 நாட்கள் மட்டுமே நடைபெற்றது. 1971இல் வங்கதேசத்தை உருவாக்கிய போர் 14 நாட்கள் மட்டுமே நடைபெற்றது. ஆனால் 1987இல் அமைதிப்படை ஈழத்தில் நடத்திய போர் இரண்டரை வருடங்கள் நடைபெற்றது.

அதுவும் நாள் ஒன்றுக்கு ஆறு கோடி ரூபா வீதம் 5400 கோடி ரூபா செலவு செய்து நடத்தியது. இந்தியாவில் ஒரிசா மாநிலத்தில் வரலாறு காணாத வறட்சியில் விவசாயிகள் செத்துக்கொண்டிருந்த வேளை, இலங்கையில் இந்திய அமைதிப்படை 5400 கோடி ரூபா செலவு செய்து போர் நடத்தியது. இந்த இந்திய அமைதிப்படையினரால் 10,000இற்கும் மேற்பட்ட அப்பாவி ஈழத் தமிழர்கள் கொல்லப்பட்டனர். 800க்கும் அதிகமான பெண்கள் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டனர். பல கோடிக் கணக்கான ரூபா பெறுமதியான தமிழ் மக்களின் சொத்துகள் சேதமாக்கப்பட்டன.

இன்று 2026 அக்டோபர் 05, 39 ஆண்டுகள் கடந்தும் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தால் மாகாணசபைத் தேர்தலைக்கூட நடத்த முடியாமல் இந்திய அரசும் திண்டாடுவதே வரலாறு.

## மயிலத்தமடு-மாதவனை... தொடர்ச்சி...

அதிகாரிகளுடன் இணைந்து நாளை (03) நேரில் வந்து கள நிலவரத்தை ஆராய்ந்து உரிய தீர்வு பெற்றுத் தருவதாக உறுதியளித்துள்ளார்.

எனினும், தங்களுக்கு நிரந்தரமான தீர்வு கிடைக்கும் வரை இதனைத் தற்காலிக ஆறுதலாக மட்டுமே ஏற்றுக்கொள்வதாகவும், பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் நிரந்தரத் தீர்விற்காகக் காத்திருப்பதாகவும் மயிலத்தமடு கால்நடை வளர்ப்பு பண்ணையாளர் சங்கத் தலைவர் சின்னத்தம்பி நிமலன் தெரிவித்தார்.

மயிலத்தமடு பகுதியில் சட்டவிரோதமாகப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுபவர்கள் மற்றும் காவல்துறை பிரிவினர் தங்களை அச்சுறுத்துவதாகவும், அமைக்கப்பட்டிருக்கும் வாடிகளை உடனடியாகப் பிரித்துச் செல்லுமாறு வற்புறுத்துவதாகவும் பண்ணையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அப்பகுதியில் தொடர்ச்சியாக நடைபெறும் காடழிப்பு காரணமாகக் கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், வன விலங்குகளின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தங்களின் மாடுகள் சுடப்பட்டுக் கொல்லப்படும் சம்பவங்களுக்கு உரிய நீதி கிடைக்கவில்லை என்றும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

## நேட்டோ நட்பு நாடுக ... தொடர்ச்சி...

குழுக்களாகப் பிரிப்பதாக அஞ்சுவதாகவும் கூறுகின்றன.

சிறிய "பெர்கன் குழுவின்" நோக்கம், பிற்காலத்தில் பரந்த கூட்டணியை வலுப்படுத்தக்கூடிய யோசனைகளை உருவாக்குவதே என்று பென்டகனின் கொள்கைத் தலைவர் எல்பிரிட்ஜ் கோல்பி கூறுகிறார்.

நேட்டோவின் மிகப்பெரிய பாதுகாப்புச் செலவின நாடுகள் உட்பட விலக்கப்பட்ட நட்பு நாடுகள், இதற்கான அளவுகோல்கள் தெளிவாக இல்லை என்றும், வாஷிங்டன் உறுப்பு நாடுகளை விருப்பமான மற்றும் விருப்பமில்லாத குழுக்களாகப் பிரிக்கிறது என்றும் அஞ்சுகின்றன.

கிரீன்லாந்தில் அமெரிக்க இராணுவ இருப்பை விரிவுபடுத்துவது தொடர்பாக அமெரிக்காவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, டென்மார்க்கும் இந்தக் குழுவில் அழைக்கப்படலாம்.

## எப்ஸ்டீன் விவகாரம்: ... தொடர்ச்சி...

ஆளான பெண்களுக்கான விசா மோசடி தொடர்பான குற்றச்சாட்டுகளை வெளிப்படுத்திய ஆவணங்கள் மற்றும் நார்வே ஊடக விசாரணைகளில் சிக்கினார். மேலும், எப்ஸ்டீன் தனது உயிலில் ரோட்-லார்சனின் குழந்தைகளுக்குப் பல மில்லியன் டாலர்களை விட்டுச் சென்றிருந்தார்.




வேல்ஸில் இருந்து **அருஸ்**

புதன்கிழமையன்று(30) துபாய் சர்வதேச விமான நிலையத்திலிருந்து பென் குரியன் சர்வதேச விமான நிலையத்திற்குச் சென்றுகொண்டிருந்த FlyDubai (FZ1073) விமானத்தில் ஏற்பட்ட “பாதுகாப்பு தொடர்பான சம்பவம்” காரணமாக, அது வடமேற்கு சவுதி அரேபியாவின் தபூக் (Tabuk) நகரில் தரையிறக்கப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.



இதில் 174 பயணிகள் மற்றும் விமானக் குழுவினர் அனைவரும் உயிர் பிழைத்தனர். விமானம் வேகமாக உயரத்தைக் குறைத்துக்கொண்டிருந்தபோது, விமானத்தில் இருந்த பயணிகளும் ஊழியர்களும் தாக்குதல் நடத்திய வரைக் கட்டுப்படுத்தி, விமானத்தின் கட்டுப்பாட்டை மீண்டும் விமானக் குழுவினரிடம் ஒப்படைக்க உதவினர்.

விமானத்தின் துணை விமானி, தலைமை விமானி யைத் தாக்கியதாகவும், விமானத்தை விபத்துக்குள்ளாக்க முயன்றதாகவும் இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறினார். பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ், இச்சம்பவத்தை ஒரு ஜிஹாதி பயங்கரவாதத் தாக்குதல் முயற்சி என்று விவரித்தார். செப்டம்பர் 11, 2001 தாக்குதல்களுடன் ஒப்பிட்டு, இஸ்ரேலிய அதிகாரிகள் இதனை ஒரு பயங்கரவாதச் செயல் முயற்சி என்று ஏற்கனவே வகைப்படுத்தியுள்ளனர். இருப்பினும், விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது; இறுதி முடிவுகள் எதுவும் இன்னும் வெளியிடப்படவில்லை.

எனவே, உண்மையில் என்ன நடந்தது என்பது குறித்த முக்கிய கேள்விக்கு இன்னும் விடை கிடைக்க வில்லை. இச்சம்பவத்தை ஒரு பயங்கரவாதச் செயலாகவே கருதுவதாக இஸ்ரேல் ஏற்கனவே கூறியுள்ளது. ஆயினும், தாக்குதல் நடத்தியவரின் நோக்கங்கள், தாக்குதல் நடந்த சூழல் மற்றும் இதில் முன் திட்டமிடல் ஏதேனும் இருந்ததா என்பது குறித்துப் புலனாய்வாளர்கள் ஆய்வு செய்து வருகின்றனர்.

சந்தேக நபர் ஓமன் நாட்டைச் சேர்ந்த துணை விமானி என்ற விவரங்கள் இஸ்ரேலியத் தரப்பிலிருந்து வந்தவை என்பதால், அவை அனைத்துத் தரப்பினராலும் உறுதிப்படுத்தப்படவில்லை. அவர் ஏதேனும் கருத்துகளைத் தெரிவித்தாரா, தீவிரவாதக் குழுக்களுடன் தொடர்பில் இருந்தாரா அல்லது வேறொருவரின் அறிவுறுத்தலின் பேரில் செயல்பட்டாரா என்பது குறித்த தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

இங்கு இரண்டு வெவ்வேறு கேள்விகளை நாம் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். முதலாவது, விமானத்திற் குள் தாக்குதல் நடத்தியவர் தனியாகச் செயல்பட்டாரா என்பது. விமானத்தின் கட்டுப்பாட்டு அறையில் (cock-pit) ஒரு நபர் மட்டுமே தாக்குதலை நடத்தியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இரண்டாவது, அரசியல் ரீதியாக அவர் ஒரு தனித்த தீவிரவாதியாக இருந்தாரா என்பது; அதாவது, வெளித் தொடர்புகள், ஆதரவு அல்லது முன்கூட்டியே திட்டமிடப்பட்ட சதித்திட்டம் ஏதுமின்றி, தனது சொந்த முயற்சியில் செயற்பட்டவரா என்பது. இது இன்னும் தெரியவரவில்லை. தாக்குதலை நடத்தியவர் ஒருவராக இருப்பதால் மட்டுமே, அவருக்குப் பின்னால் எந்த அமைப்பும் இல்லை என்று அர்த்தமாகிவிடாது. அதேபோல, இஸ்ரேலுக்குச் செல்லும் விமானம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் என்பதாலேயே, அத்தகைய அமைப்பு ஒன்று இருந்தது என்று உறுதியாகிவிடாது.




விமானம் டெல் அவிவ் நகருக்குச் சென்று கொண்டிருந்ததாலோ அல்லது அதில் இஸ்ரேலியர் கள் பயணித்ததாலோ, துணை விமானி (copilot) வேண்டு மென்றே விமானத்தை அழிக்க முயன்றார் என்று புலனாய்வாளர்கள் உறுதிப்படுத்தினால், அந்தச் சம்ப வத்தை அவரது பணிசார்ந்த அணுகல் வசதியைப் பயன்படுத்தி நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலாக வகைப்படுத்தலாம். ஆயுதத்துடன் விமானத்தில் ஏற முயலும் தாக்குதலாளி தொடர்பான வழக்கமான சூழலிலிருந்து இது மாறுபட்டதாக இருக்கும். அத்தகைய சூழலில், பாதுகாப்பு தொடர்பான சவாலானது பயணிகளைச் சோதிப்பதோடு நின்றுவிடாமல், விமானப் போக்குவரத்து அமைப்பிற்குள் உள்ள ஒரு நம்பகமான பதவியை ஒருவர் தவறாகப் பயன்படுத்திக்கொள்ளும் சாத்தியக்கூறு வரை நீளும்.

இருப்பினும், இந்தச் சம்பவத்தை விமானக் குழுவைச் சேர்ந்த இருவருக்கு இடையிலான தனிப்பட்ட மோதல் என்று மட்டும் கருதி ஒதுக்கிவிட முடியாது. அந்த விமானம் இஸ்ரேலை நோக்கிச் சென்று கொண்டிருந்தது; நீண்டகால மோதல்கள் அன்றாட வாழ்வின் ஒரு பகுதியாகிவிட்ட ஒரு பிராந்தியத்தில்தான் இந்த மோதல் நிகழ்ந்தது. இந்த வாரத்தில், இஸ்ரேலியப் படைகள் காசா மீது மீண்டும் தாக்குதல் நடத்தியதில் பாலஸ்தீனப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இத்தகைய சூழலில், போர்நிறுத்தம் குறித்த அர்த்தமுள்ள பேச்சுவார்த்தைக்கு இடமே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். செப்டம்பர் மாதத்தில் மேற்குக் கரையில் (West Bank) மேலும் சில தாக்குதல்கள் நடந்தன; அவற்றில் ஹமாஸ் போராளிகள் யாரும் ஈடுபடவில்லை. ஆயுதம் ஏந்திய நபர் ஒருவர் இஸ்ரேலியர் ஒருவரைத் தாக்கினார்; அதேவேளையில், குடியேறிகள் சிலர் பாலஸ்தீனக் குடும்பம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தினர்.

இச்சூழலில் தீவிரவாதப் போக்கு என்பது புதிய ஆயுதமேந்திய குழுக்களின் தோற்றம் சார்ந்தது மட்டுமல்ல. வன்முறையை ஒரு ஏற்றுக்கொள்ளத்தக்க அரசியல் நடவடிக்கையாகக்கருதுவது,அரசாங்கத்தின்செயல்களுக்கு ஒட்டுமொத்த மக்களையும் பொறுப்பாக்குவது மற்றும் எந்தவொரு சமரசத்தையும் துரோகமாகக் கருதுவது போன்ற மனநிலைகள் மக்களிடையே அதிகரிப்பதையும் இது குறிக்கிறது. இராணுவ நடவடிக்கைகள், பொதுமக்களின் உயிரிழப்புகள் மற்றும் பரஸ்பரக் குற்றச்சாட்டுகள் எவ்வளவு காலம் நீடிக்கின்றனவோ, அவ்வளவு எளிதாகத் தீவிரவாதிகளால் வன்முறையை ஒரு குற்றமாக அல்லாமல் ‘பழிவாங்குதல்’ அல்லது ‘எதிர்ப்பு’ என்று சித்தரிக்க முடி கிறது. பல்வேறு தரப்பினரும் இத்தகைய வாதங்களைப் பயன்படுத்தினாலும், பொதுமக்களைத் தாக்கும் தனிப்பட்ட குற்றவாளிகளை அது பொறுப்பிலிருந்து விடுவிப்பதில்லை.

காசாவில் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகள், மேற்குக் கரையின் சூழல், குடியேற்றப் பகுதிகளை விரிவுபடுத்துதல் மற்றும் இஸ்ரேலிய அதிகாரிகளின் ஆத்திரமூட்டும் கருத்துகள் ஆகியவை அப்பிராந்தியத்தில் அநீதி உணர்வை ஆழமாக்குகின்றன. மத்திய கிழக்கு முழுவதும், இஸ்ரேலின் கொள்கைகளே பயங்கரவாதம் அதிகரிப்பதற்குக் காரணம் என்று பரவலாகக் கருதப்படுகிறது. இந்தச் சூழலில் மற்றொரு பக்கமும் உள்ளது. இஸ்ரேலியப் பொதுமக்கள் மீதான தாக்குதல்களும் இஸ்ரேலின் பாதுகாப்பிற்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்களும், வன்முறை யைப் பயன்படுத்துவதற்கு இஸ்ரேலுக்குள் இருக்கும் பொதுமக்களின் ஆதரவை வலுப்படுத்துகின்றன. அதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் பதிலடி நடவடிக்கைகள், தீவிரமான எதிர்ப்பை முன்னெடுப்பவர்களுக்குப் புதிய வாதங் களுக்கான வாய்ப்பை அளிக்கின்றன. இதில் இரு தரப்பினரும் தங்கள் சொந்த நடவடிக்கைகளை நியாயப் படுத்த எதிர்த்தரப்பின் வன்முறையையே காரணமாகக் காட்டுகின்றனர். ஃப்ளைதுபாய் சம்பவம் அந்தப் போக் கின் ஒரு பகுதியாக இருக்கலாம், மேலும் தாக்குதல் நடத்திய வரின் நோக்கமாகப் பழிவாங்கும் எண்ணத்தை நிராகரிக்க முடியாது.




இநதச் சம்பவம் நடப்பதற்கு ஒரு நாள் முன்னதாக, இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, இஸ்ரேலியத் தேர்தலுக்கு முந்தைய “பாதுகாப்பு அச்சுறுத்தல்” என்று கூறப்படும் ஒரு விவகாரம் குறித்து, எதிர்க்கட்சித் தலைவர் யாயிர் லாபிட்டுடன் பாதுகாப்பு அமைப்பு மதிப்பீடு மற்றும் பேச்சுவார்த்தைகளை நடத்தி “தேர்தலுக்கு முன்னதாக நம் எதிரிகள் நம்மைத் தாக்க முயற்சிப்பார்கள் என்பதற்கான அறிகுறிகள் உள்ளன,” என்று அறிவித்திருந்தார்.

குறிப்பாக, இந்தத் தாக்குதல் சித்தாந்த ரீதியாகத் தூண்டப்பட்டது என்றும், இஸ்ரேலுக்குச் செல்லும் விமானத்தை வேண்டுமென்றே குறிவைத்தது என்றும் புலனாய்வாளர்கள் உறுதிப்படுத்தினால், இதுபோன்ற முயற்சிகள் மீண்டும் நிகழாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. அத்தகைய கண்டுபிடிப்பு, இஸ்ரேலுக்குச் சேவை செய்யும் விமானங்களுக்குக்

தொடர்ச்சி: பக்கம் 13

## விரிவடைந்து வரும் ... தொடர்ச்சி...

கொண்டிருப்பார் என்று நாங்கள் மனதார நம்புகிறோம்; அதற்காகப் பிரார்த்திக்கிறோம்.

சிவராசா அனோஜனின் நீதிமன்றப் போராட்டம் தொடர் பான காலவரிசை பின்வரும் நிகழ்வுகளை வெளிப்படுத்துகிறது:

2026 ஜூன் 27: கல்முனையில் நாய் ஒன்றை உதைக்கும் சம்பவம் நடைபெறுகிறது. இது சமூக ஊடகங்களில் வைரலாகிறது. சவூதி அரேபியாவில் இருந்த அனோஜன், இது குறித்த அனல் பறக்கும் இணைய விவாதத்தில் பங்கேற்கிறார். மத நிந்தனைக்குரிய அந்தப் பதிவை அவர் நீக்கினாலும், அதற்குள் காலம் கடந்துவிட்டது.

2026 ஜூலை 2: சவூதி காவல்துறையினரால் அனோஜன் கைது செய்யப்படுகிறார்.

2026 ஜூலை 15: அல்-அஹ்சா குற்றவியல் நீதிமன்றம், அவர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதாகத் தீர்ப்பளிக்கிறது.

2026 ஆகஸ்ட் 24: 5 ஆண்டு சிறைத்தண்டனையைக் குறைக்குமாறு அல்லது நிவாரணம் கோரி, இலங்கை வெளியுறவு அமைச்சக அதிகாரிகள் வாயிலாக அனோஜனின் பெற்றோர் முதல் மேல்முறையீட்டைச் செய்கின்றனர்.

2026 செப்டம்பர் 17: மேல்முறையீட்டு நீதிமன்றம் அனோஜனின் மனுவை பரிசீலிக்கிறது. நீதிமன்றம் அவரது மனுவை நிராகரிப்பதுடன், குற்றச்சாட்டை 'ஷரியா சட்டத்தின் கீழ் வரும் குற்றமாக' உயர்த்துவதற்கான அரசுத் தரப்பின் எதிர்-மேல்முறையீட்டை ஏற்றுக்கொண்டு, அவருக்கு மரண தண்டனை விதித்து அதிகாரப்பூர்வமாக அறிவிக்கிறது.

2026 செப்டம்பர் 22: வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் நாடாளுமன்றத்தில் அதிகாரப்பூர்வ அமைச்சரவை அறிக்கையைச் சமர்ப்பிக்கிறார். இதில் எதிர்-மேல்முறையீடு தொடர்பான நிகழ்வுகள் உறுதிப்படுத்தப்படுவதுடன், 30 நாட்களுக்குள் சவூதி உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வதற்கான அரசின் அவசரத் திட்டங்களும் அறிவிக்கப்படுகின்றன.

வெளியுறவு அமைச்சரின் நாடாளுமன்ற விளக்கத்தின்படி,ஃபேஸ்புக் பதிவு ஒன்றின் காரணமாக அனோஜனின் வேலைவாய்ப்பு பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஜூலை 1 அன்று அவரது குடும்பத்தினர் இலங்கை வெளியுறவு அமைச்சகத்தைத் தொடர்பு கொண்டனர்; இதனால் அவரை தாயகம் அழைத்து வருவதற்கான உதவிகோரி இலங்கைத் தூதரகம் அவரது நிறுவனத்தைத் தொடர்பு கொண்டது. மறுநாளே, அனோஜனை சவூதி காவல்துறை கைது செய்துள்ள தகவல் தூதரகத்திற்குத் தெரிவிக்கப்பட்டது.

ஊடகங்களிடம் பேசிய ஐ.டி.ஏ.கே (ITAK) நாடாளுமன்ற உறுப்பினர் ஷானக்கியன் இராசமாணிக்கம், வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் அனோஜனின் பெற்றோரைச் சந்தித்து, குறைவான தண்டனையைப் பெறுவதற்காக சவூதி மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய வேண்டும் என்று கூறியதாகத் தெரிவித்தார். இதற்கு 19 மில்லியன் ரூபாய்கள் செலவாகும் என்றும் அவர்கள் பெற்றோரிடம் கூறியிருந்தனர். அனோஜனின் பெற்றோர் தங்கள் வசம் இருந்த கடைசிச் சல்லிக்காசையும் திரட்டி, மிகுந்த சிரமத்திற்கு மத்தியில், தேவைப்பட்ட தொகையை எப்படியோ புரட்டிக் கொடுத்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் கூறியதன்படி, முன்கூட்டியே விடுதலை கோரிய மனு தோல்வியடைந்தது மட்டுமல்லாமல், ஐந்து ஆண்டு சிறைத்தண்டனை மரண தண்டனையாக உயர்த்தப்பட்ட துயரச் செய்தியும் அந்தப் பெற்றோரிடம் தெரிவிக்கப்பட்டது. "என் மகன் முன்கூட்டியே விடுதலை செய்யப்பட வேண்டும் என்று பிரார்த்தித்து 19 லட்சம் ரூபாயைச் செலவிட்டேன்; ஆனால் இப்போது, என் மகனை மரணத்தை நோக்கி அனுப்புவதற்காகவே அந்தப் பணத்தைச் செலவிட்டிருப்பதை உணர்கிறேன்," என்று சிவராசாவின் தாயார் கதறினார்.

மத நிந்தனைக் குற்றச்சாட்டில் குற்றவாளி என்பது மறுக்கமுடியாதஉண்மைஎன்றாலும்,ஆழ்ந்தஅறியாமையின் காரணமாகவே அந்தச் செயலைச் செய்தவர் என்பதால் அவர் குற்றமற்றவராகவே கருதப்பட வேண்டியவர்; மரண தண்டனையை எதிர்கொள்ளும் அந்த இளம் இலங்கை இளைஞருக்கு மனிதாபிமான அடிப்படையில் கருணை காட்ட வேண்டும் என்ற கோரிக்கைகளைச் சவூதி அரேபியா புறக்கணித்து மரண தண்டனையை நிறைவேற்ற எடுத்த முடிவை உலகம் முழுவதிலும் உள்ள மனித உரிமை ஆர்வலர்கள் கண்டித்தனர்.

அனோஜனின் உயிரைக் காப்பாற்ற சவூதி மன்னரிடம் விடுக்கப்படும் எண்ணற்ற கருணைக் கோரிக் கைகள் ஒருவேளை உதவாமல் போகலாம்; ஆனால், நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் வலியுறுத்தியது போல, அமெரிக்கத் தூதுவர் தனது நாட்டின் செல்வாக்கைப் பயன்படுத்தி, சவூதி அரசாங்கத்தின் நிலைப்பாட்டை மாற்றியமைக்க அழுத்தம் கொடுத்து இதில் தலையிடுமாறு விடுக்கப்படும் தீவிரமான கோரிக்கையே, அனோஜனின் கழுத்து துண்டிக்கப்படுவதைத் தடுப்பதற்கான ஒரே நடைமுறைச் சாத்தியமான தீர்வாக அமையக்கூடும்.

அல்லது, சவூதி மன்னரின் பிடிவாதமான மனதை இளகச் செய்யவும், அனோஜனின் தலை துண்டிக்கப்படும் அந்தத் துயர நிகழ்வைத் தவிர்க்குமாறு கண்ணீர் மல்க விடுக்கப்படும் கோரிக்கைக்கு அவரை இணங்க வைக்கவும், 'ஆயிரத்து ஓர் அரேபிய இரவுகள்' கதையில் வருவது போல விறுவிறுப்பான கதைகளைச் சொல்லும் மற்றொரு 'ஷஹ்ரசாத்' (Scheherazade) தேவைப்படலாம். அப்படி நடந்தால் மட்டுமே, கல்முனையிலிருந்து சுமார் 2,500 மைல் தொலைவில் உள்ள தன் மகனுக்காகத் துயருறும் அந்தத் தாயின் கண்ணீர் வற்றிய கண்களில் நிம்மதி பிறக்கும்.

**நன்றி: சன்டே ரைம்ஸ்**

## தியாக தீபம் திலீபனின்... தொடர்ச்சி...

ஸார் பாய்ந்து சென்று சிலையை அகற்றியுள்ளனர். அது மட்டுமன்றி, மாநகர சபையும் தனக்கு பொலிஸாரின் அழுத்தங்கள் அதிகரித்த தருணத்தில் தற்காலிக அனுமதி தான் வழங்கப்பட்டதாகப் பதிலளித்து நழுவியிருக்கின்றது.

ஆகவே, தமிழரசுக் கட்சியும், தமிழ்த் தேசிய முன்னணியும் திலீபனின் உருவச்சிலை விடயத்தில் யார் யாரை விஞ்சுவது என்ற மனப்பான்மையுடன் தாராளமாகவே இருக்கின்றார்கள் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

அதனைவிட, தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானம் திலீபனுக்கு முதலில் சிலை அமைத்தவர் நானே என்றும், அதன்பின்னரே தான் சுடப்பட்டதாகவும் கூறுகின்றார். தொடர்ந்து போரின் நிறைவின் பின்னரான காலத்தில் தமது சிறிதரனும், சுமந்திரனும் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் நினைவாலய வளாகத்தைப் புனரமைத்தார்கள் என்றும் அக்கட்சியினர் கூறுகின்றார்கள்.

இதில் என்ன தவறிருக்கின்றது, திலீபன் என்ற இளைஞன் தனது சொந்த நலனுக்கான உண்ணாநோன்பு இருக்கவில்லை. ஊனை உருக்கவில்லை. நீராகாரமின்றி சாவைத்தழுவவில்லை. தமிழர் தேசத்துக்காக, தமிழ் மக்களுக்காகவே தன்னுயிரைத் துச்சமென மதித்து துறந்தார்.

அவர், தன்னுயிரை ஈகம் செய்தமையால்தான், மக்கள் பிரதிநிதிகளாகவும், அரசியல்வாதிகளாகவும் இன்று சமூகத்தில் ஊடாட்டம் செய்வதற்கான இடைவெளிகூட ஏற்பட்டிருக்கின்றது என்பதை மறந்துவிடக்கூடாது. அத்தகைய ஒரு தியாகிக்கு 'அதைச் செய்தேன், இதைச் செய்தேன்' என்று கூறுவதும், அத்தியாகச் செம்மலை வைத்து அரசியல் செய்ய முற்படுவதுமே அடிப்படை அறம் தவறிய செயற்பாடாகும்.

மேலும்,தமிழர்களின்நினைவேந்தல்விவகாரத்தை அரசாங்கம் சட்ட ரீதியான சிக்கலாக மாற்றாமல், அரசியல் ரீதியாகக் கையாண்டிருக்க வேண்டும். முந்தைய சந்திரிகா மற்றும் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கங்கள் திலீபனின் நினைவுத்தூபியை இடித்துத்தள்ளின.

தற்போதைய அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கமும் அதே பேரினவாதப் பாதையிலேயே பயணிக்கிறது என்பதை இச்சம்பவம் நிரூபித்துள்ளது. வடக்கு, கிழக்கு இணைப்பு விவகாரத்தில் ஜே.ஆர். ஜயவர்த்தன அரசியல் தீர்மானத்தை எடுத்தபோது, ஜே.வி.பி. நீதிமன்றத்திற்குச் சென்று சட்ட ரீதியாக அதனைப் பிரித்தது.

அதேபோலவே இப்போதும், சட்ட ரீதியான இடுக்குகளைப் பயன்படுத்தி தமிழர்களின் நினைவேந்தல் உரிமையைப்பறிக்கமுற்படுகிறது.தென்னிலங்கைச்சிங்கள பௌத்த வாக்காளர்களின் கோபத்திற்கு ஆளாகிவிடுவோம் என்ற அச்சத்தினால், அரசாங்கம் பொலிஸாரையும் நீதிமன்றத்தையும் கேடயமாகப் பயன்படுத்துகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் தனது அறிக்கையில், சட்டத்தின் இறுக்கமான விதிகளுக்குள் நினைவேந்தலை முடக்காமல், அரசியல் ரீதியாகவும் மனித உரிமை ரீதியாகவும் பாதிக்கப்பட்ட மக்களின் நினைவேந்தல் உரிமை மதிக்கப்பட வேண்டும் என்றே வலியுறுத்தியிருந்தார்.

ஆனால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஐ.நா. அறிக்கையின் பரிந்துரைகளை மட்டுமன்றி, தமிழ் மக்களின் அடிப்படைச் சுதந்திரத்தையும் அப்பட்டமாக நிராகரிக்கிறது என்பதையே தியாக தீபம் திலீபனின் உருவச்சிலை அகற்றப்பட்ட சம்பவம் தெட்டத்தெளிவாக உணர்த்துகின்றது.

அப்படியிருக்கையில், அரசியல்வாதிகளும் பிரிந்து நின்று முட்டுப்பட்டுக்கொண்டிருப்பது தமிழின ஒடுக்குமுறையை கையாளும் அரசாங்கத்துக்கு மேலும் வசதியாகவே அமைகின்றது.

ஆகவே, தியாக தீபத்தின் நோக்கங்கள் இன்னமும் அடையப்படவில்லை. அந்தத் தியாகத்தின் இலக்குகளுக்காக இன்னமும் போராட வேண்டியுள்ளது. அதுவரையில் பார்த்தீபன் பசியோடுதான் இருக்கிறான் என்பதைத் தவறியேனும் மறந்து செயற்படுதல் மூன்றாந்தரமானது.

## தியாக தீபம் லெப்டினன்ட் ... தொடர்ச்சி...

தும் மக்களைப் பொறுத்தவரை, இந்தக் கேள்வி இன்னும் ஆழமானது; ஏனெனில், தாயகம் முழுவதும் கட்டாயப்படுத்தும் அதிகாரத்தைக் கொண்ட நிறுவனங்கள் அந்த மக்களின் அரசியல் கட்டுப்பாட்டிற்கு முற்றிலும் அப்பாற்பட்டதாக இருக்குமானால், அரசியல் சுயாட்சி என்பது கணிசமான அளவு அர்த்தமற்றதாகிவிடுகிறது. நிலப்பரப்பைக் கண்காணிப்பதற்கும், பாதுகாப்புக் கொள்கையைக் கட்டுப்படுத்துவதற்கும், இராணுவ இருப்பின் அளவைத் தீர்மானிப்பதற்கும் யாருக்கு அதிகாரம் உள்ளது என்பதைப் புறக்கணித்துவிட்டு, தேர்தல்கள், பண்பாட்டு உரிமைகள் அல்லது நிர்வாக சபைகள் மூலமாக மட்டுமே தன்னாட்சியைப் புரிந்துகொள்ள முடியாது.

எனவே, நான்காவது கோரிக்கையானது, தன்னாட்சிக்கும் பாதுகாப்பு ஆட்சிமுறைக்கும் இடையிலான ஓர் இன்றியமையாத உறவை வெளிப்படுத்தியது.ஈழத்தமிழர்கள் தங்கள் தாயகத்தில் அர்த்தமுள்ள அரசியல் அதிகாரத்தைச் செலுத்த வேண்டுமானால், அந்தத் தாயகத்தில் அடக்குமுறை அதிகாரத்தைச் செலுத்தும் நிறுவனங்கள், அர்த்தமுள்ள தன்னாட்சிக்கு என்ன தேவை என்பது குறித்த விவாதத்தின் ஒரு பகுதியாக அவசியமாக அமைகின்றன. இது, என்ன அரசியலமைப்பு ஏற்பாடு இருக்க வேண்டும் என்பதை முன்கூட்டியே துல்லியமாகத் தீர்மானிக்கவில்லை, ஆனால் பாதுகாப்பும் இராணுவமயமற்ற தன்மையும் ஏன் தமிழ் தேசியப் பிரச்சினையின் மையமாக இருந்து வருகின்றன என்பதை இது விளக்குகிறது.

**தொடரும்.......**

## நடுவானில் நடந்தது ... தொடர்ச்சி...

கடுமையான பாதுகாப்பை ஏற்படுத்த வழிவகுக்கும். இதில், பணியாளர்களை இன்னும் கடுமையாகச் சரிபார்த்தல், திருத்தப்பட்ட விமானி அறை அணுகல் நடைமுறைகள் மற்றும் விமானப் பணியாளர்களின் நடத்தையை இன்னும் நெருக்கமாகக் கண்காணித்தல் ஆகியவை அடங்கும். இஸ்ரேலிய அதிகாரிகள் ஏற்கனவே வலுவான விமானப் பாதுகாப்பு நடவடிக்கைகளை அறிவித்துள்ளனர், அதே நேரத்தில் ஃப்ளைதுபாய் நிறுவனம் விசாரணை முடியும் வரை இஸ்ரேலுக்கான விமானச் சேவைகளை நிறுத்தி வைத்துள்ளது.

ஆனால், ஒரே ஒரு சம்பவத்தை வைத்துக்கொண்டு இது போன்ற தாக்குதல்களின் "அலை" ஒன்று வரப்போகிறது என்று கணித்துவிட முடியாது. மேலும், இந்த அச்சுறுத்தல் விமானங்களின் மீதான தொடர் தாக்குதல்களாகவே இருக்க வேண்டும் என்பதில்லை. பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ள நிலையில், பயங்கரவாதக் குழுக்கள் குறைந்த பாதுகாப்புள்ள இலக்குகளையும் எளிமையான வழிமுறைகளையும் நாடக்கூடும். தாக்குதல் நடத்தியவர் தனது பணி சார்ந்த பதவியின் மூலம் விமானத்திற்குள் நுழைய முடிந்தவர் என்று தெரியவந்தால், அதிலிருந்து பெறப்படும் மிக முக்கியமான பாடம் இஸ்ரேல் செல்லும் விமானங்களின் பாதுகாப்பைத் தாண்டியதாக இருக்கும். இது, விமானப் போக்குவரத்துத் துறை ஒரு புதிய வகையான 'உள்நபர் அச்சுறுத்தலுக்கு' (insider threat) எவ்வளவு எளிதில் ஆளாகக்கூடியது என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டும்.

இது ஒரு பயங்கரவாதத் தாக்குதல் என்று உறுதியாகக் கூறுவதற்கு இன்னும் மிக ஆரம்ப நிலையிலேயே இருக்கிறோம். தற்போதைய நிலையில் தெரிந்ததெல்லாம், இது ஒரு பயங்கரவாதத் தாக்குதலாக இருந்தபட்சத்தில், தாக்குதல் நடத்தியவர் விமானத்திற்குள் தனியாகவே செயல்பட்டார் என்பது மட்டுமே. அவருக்கு ஏதேனும் குழுவுடன் தொடர்பு இருந்ததா அல்லது அவரைத் தூண்டியது எது என்பது இன்னும் கண்டறியப்பட வேண்டியுள்ளது.

இந்தப் பிராந்தியம் முழுவதும் தீவிரவாதமயமாதல் அதிகரித்து வருகிறது. போர்கள், ஒடுக்குமுறை, பரஸ்பரம் மனிதத்தன்மையற்றவர்களாகக் கருதும் போக்கு மற்றும் வெறுப்புணர்வின் அடிப்படையில் முன்னெடுக்கப்படும் அரசியல் அணிதிரட்டல் ஆகியவை தொடரும் வரை வன்முறைக்கான சாத்தியக்கூறுகள் நீடித்தே இருக்கும்.

• • •

## பிரமந்தனாற்றுப் படு ... தொடர்ச்சி...

பதிவு செய்கின்றன.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் பொதுமக்கள் உயிரிழந்ததாகக் கூறப்படும் பிரமந்தனாற்றுச் சம்பவம், நாற்பது ஆண்டுகளைக் கடந்த பின்னரும் அப்பகுதி மக்களின் நினைவில் நீங்காத துயரமாகத் தொடர்கிறது.

உயிரிழந்த பொதுமக்களை நினைவுகூர்ந்து அவர்களின் ஆத்மசாந்திக்காக இன்று (02) பிரமந்தனாற்றிலும் புலம்பெயர் வாழ் மக்களிடையேயும் நினைவேந்தல்கள் இடம்பெற்றன.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .



சி.கிருத்திகா
அன்புவழிபுரம்

# குழந்தைகள் மீதான துன்புறுத்தல்



குழந்தைகள் நாட்டின் எதிர்காலம். அவர்களுக்கு அன்பும் பாதுகாப்பும் கல்வியும் வழங்க வேண்டியது பெற்றோர், குடும்பத்தினர் மற்றும் சமூகத்தின் பொறுப்பாகும். ஆனால் சில குழந்தைகள் உடல், மனம், பாலியல் அல்லது புறக்கணிப்பு போன்ற பல்வேறு வகையான துன்புறுத்தல்களை எதிர்கொள்கின்றனர். இது குழந்தையின் உடல் மற்றும் மனநல வளர்ச்சியில் நீண்டகால பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும்.

குழந்தைகள் மீதான துன்புறுத்தல் பல வடிவங்களில் நடைபெறலாம். உடல் ரீதியான துன்புறுத்தல், அவமதித்தல் அல்லது அச்சுறுத்துதல் போன்ற மனரீதியான துன்புறுத்தல், குழந்தையின் தேவைகளைப் புறக்கணித்தல், மேலும் பாலியல் துன்புறுத்தல் ஆகியவை அவற்றில் அடங்கும்.
சில நேரங்களில் குழந்தைகள் தங்களுக்கு நேர்ந்ததைப் பற்றி பேச பயப்படலாம் அல்லது அது தவறு என்பதை அறியாமல் இருக்கலாம்.

குழந்தைகளைப் பாதுகாப்பதற்கு முதலில் அவர்களுடன் அன்பாகவும் பொறுமையாகவும் பேச வேண்டும். அவர்கள் கூறும் விஷயங்களை அலட்சியப்படுத்தாமல் கவனமாகக் கேட்பது மிகவும் முக்கியம். குழந்தை ஏதாவது அசௌகரியமான அனுபவத்தைப் பகிர்ந்தால், அவரைக் குற்றம் சாட்டாமல் நம்பிக்கையுடன் ஆதரிக்க வேண்டும். தேவையான போது நம்பகமான பெரியவர், ஆசிரியர் அல்லது உரிய அதிகாரியிடம் உதவி பெற வேண்டும்.

பள்ளிகளிலும் சமூகத்திலும் குழந்தைகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். குழந்தைகளுக்கு தங்களுடைய உரிமைகள், பாதுகாப்பான மற்றும் பாதுகாப்பற்ற நடத்தைகள், உதவி கேட்கும் வழிகள் போன்றவற்றைப் பற்றி வயதுக்கேற்ற முறையில் கற்றுக்கொடுக்க வேண்டும்.

குழந்தைகளுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்குவது அனைவரின் கடமையாகும். ஒவ்வொரு குழந்தையும் அன்புடனும் மரியாதையுடனும் பயமின்றியும் வளரக்கூடிய உரிமை கொண்டவர். எனவே, குழந்தைகள் மீதான துன்புறுத்தலைத் தடுப்பதற்கும், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உரிய ஆதரவை வழங்குவதற்கும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

**செ. தச்சாயினி**
பாலையூற்று

# 100 ஆண்டுகளுக்குப் பின் கண்டுபிடிக்கப்பட்ட புதிய காட்டுப் பூனை!

பொலிவியாவின் யுங்காஸ் மேகக் காடுகளில் டில்காயோ (Tilcayo) என்ற புதிய காட்டுப் பூனை இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது வீட்டுப் பூனையை விட மிகச் சிறியது, வெறும் 1.4 கிலோ எடை மட்டுமே கொண்டது. வெளிர் மஞ்சள் நிறத்தில் சிறுத்தை போல கரும் புள்ளிகள் கொண்ட அழகிய உயிரினம்.

100 ஆண்டுகளுக்குப் பின் முதல் முறையாக கண்டுபிடிக்கப்பட்ட புதிய பூனை இனம் இதுதான் என்பது தான் இதன் சிறப்பு.



**மு.சந்தியா**
செல்வநாயகபுரம்

# காற்று

தொட முடியாத தோழன் நீ,
கண்ணுக்குத் தெரியாமல்
கதை பேசுகிறாய்.

மரங்களின் இலைகளில்
உன் கைரேகை,
கடல் அலைகளில்
உன் காலடி.

சில நேரம் தாலாட்டு,
சில நேரம் புயலாய்,
எப்போதும் நீ
என்னோடுதான் இருக்கிறாய்.

கண்ணை மூடினால்
உன்னை உணர்கிறேன்,
நீ இல்லாத உலகில்
நான் இல்லை.



**சு.திகழினி**
கன்னியா




# தாயகமும் வாழ்வும்

